
கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

கல்வி அழகே அழகு

# இந்துதீபம்

## நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்



1986-09-14

வாழ்த்துகிறேம் கல்விச் சேவைக்கு நீவிர் ஆற்றும்

பணியை வாழ்த்துகிறேம்.

# சீக்கோ

விநியோகஸ்தர்கள்:

- பென்ரலைட், டியூலக்ஸ், லங்கா பிறைட் பெயின்ற் வகைகள்
- மகாராஜா ஸ்தாபனத்தாரின் எஸ்லோன் பைப் வகைகள்
- மின்சார உபகரணங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள்
- பூட்டு, பிணைச்சல் வகைகள்
- சீமெந்து, கம்பிவகை மற்றும் கட்டிடப் பொருட்கள்
- எவர்சில்வர் பாத்திரங்கள், அன்பளிப்புப் பொருட்கள்

மேலும் வாடகைக்கு:

அலங்கார - சாதாரண தகரப்பந்தல்கள்,

மணவறைகள், புதிய இரும்புக்கதிரைகள்

இவை அனைத்துக்கும் நாடுங்கள்:

# சீக்கோ

கே. கே. எஸ். வீதி, — கோண்டாவில்.

# இந்துதீபம்

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

கோண்டாவில்.

14-09-86

## மலர் ஆசிரியர் குழு:

*பொறுப்பாசிரியர்:*

திருவாட்டி அ. தனேஸ்வரன்
(ஆசிரியர்)

*நிருவாக ஆசிரியர்:*

திரு. கா. தம்பிராசா
(பா. அ. ச. உறுப்பினர்)

*மாணவர் பிரதிநிதிகள்:*

செல்வி ப. ரஜனி
செல்வன் பா. இரகுதரன்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்து

இரண்டாவது குருமஹா சந்நிதானம் – ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

**சைவ மெய்யன்பர்களே,**

யாழ். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு விழா எடுப்ப தறிந்து மிக மகிழ்ச்சியடைகிறோம். சைவமும், நற்றமிழும் வளரவேண்டுமென்ற சீரிய நோக்கோடு பிரமஸ்ரீ வேங்கடாசலக் குருக்கள் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற சைவ வித்தியாசாலை தனிவளர்ந்து இந்து மகா வித்தியாலயமாக நூற்றாண்டுப் பருவமடைந்ததென்றால் உண்மையில் பாராட்டுக்குரியதொன்றாகும். தெய்வ நம்பிக்கை, தெய்வ உணர்வு, நல்லொழுக்கம் ஆகிய நற்பண்புகளை உயர்வுற வளர்ப்பது சைவ வித்தியாலயங்களேயாகும். எனினும் பெற்றாரின் ஊக்கமும் முதற்கண் வேண்டப்படுவதாகும். தெய்வ உணர்வு இல்லா உள்ளங்களில் மற்றைய நற்பண்புகளெல்லாம் நசிந்துவிடும். நிருவாகத்திறமையை நோக்கின் இம் மகா வித்தியாலயம் மற்றைய சைவ வித்தியாலயங்களுக்கு எடுத்துக் காட்டாக அமையும். அடுத்தடுத்து அமர்ந்து சேவையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களுக்கும், தற்போதைய அதிபர் திரு. சொக்கன் அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்குமே அப்பெருமை சாரும். இன்று இளைஞர்களின் உள்ளங்களில் விரக்தி மனப்பான்மை உருவாகாமல் நல்வழிகளால் ஈர்த்து வைக்கும் தலையாய கடமை ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்குமே உண்டென்பது எமது உறுதியான நம்பிக்கை. ஆதீனம் போன்ற சைவ நிறுவனங்கள் சார்பாக நின்று ஊக்கமளித்து இயன்ற துணைபுரிய வேண்டும். இவ்வகையான சைவமும், தமிழும் தெய்வ உணர்வும் பழைய நிலை எய்தும் என்பது திண்ணம்.

இவ்விழா செவ்வனே நிறைவுற ஆக்கமும் ஊக்கமுமளித்துச் சுயநலமிலாப் பெருமுயற்சி எடுத்த அன்பர்கள் அனைவருக்கும் இறையருளைச் சிந்தித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

# கல்விக்கூடம் கவினுற வளர்க

திரு. இ. சுந்தரலிங்கம் B. Sc., Dip. Ed.
( யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் )

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் கடந்த ஒரு நூற்றாண்டாகக் கல்வி உலகுக்கு ஆற்றிய சேவையை எடுத்துக் கூறும் வகையிலே வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கோண்டாவில் வாழ் பெருந்தமிழ், சைவ மக்களின் வாழ்வுடனும் மேம்பாட்டுடனும் ஆரம்பித்த காலம் தொட்டுப் பின்னிப் பிணைந்து பல இளஞ் சந்ததியினருக்கு எதிர்காலம் சமைத்த இம் மகாவித்தியாலயம் மேலும் வளர்ந்து கல்விச் சேவையாற்ற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஒவ்வொரு சமுதாயத்தினதும் எதிர்பார்ப்புக்களையும் விழுமியங்களையும் நிறைவு செய்வன அவ்வச் சமுதாயங்களிலே தோன்றி ஓங்கி வளர்ந்து பிரதியுபகாரம் கருதாமல் ஞானத்தை அள்ளி வழங்கும் கல்விக் கூடங்களாகும். எமது மூதாதையர் இவை போன்ற பல கல்விக் கூடங்களை ஆங்காங்கே அமைத்துக் கல்வியாளர்களையும் நற்பிரசைகளையும் உருவாக்கியதுடன் அந்நிய ஆதிக்கத்தால் சைவமத அனுட்டானங்களினின்றும் நீங்கி அந்நிய நெறிகளைத் தழுவி நின்ற மக்களைச் சைவப் பண்பாட்டில் நன்னெறிப்படுத்தினர்; அச்சீரிய நோக்கின் அடிப்படையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய வழியில் சைவப் பாடசாலைகளைக் கிராமந்தோறும் சைவ விழிப்புணர்வுடன் நிறுவினர். இவ்வுந்தலின் அடிப்படையிலேயே கோண்டாவில் சைவப் பாடசாலையையும் 1878 ஆம் ஆண்டிலே கோண்டாவில் வாழ் சைவப் பெரியார்களின் அனுசரணையுடன் பிரமஸ்ரீ வேங்கடாசல ஐயர் அவர்கள் நிறுவினர். அன்று சிறிய பாடசாலையாக ஆரம்பித்த இக்கல்வி நிறுவனம் காலப்போக்கில் அரசசிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தோற்றுவித்து வெற்றியும் கண்டு பெருமையும் தேடிக்கொண்டது.

1961 ஆம் ஆண்டளவிலே அரசு, தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது இக் கல்விக்கூடமும் அரசாங்க பாடசாலையாக அமைந்தது. அதன் பின்னர்க் கோண்டாவில் வாழ் பெருமக்களின் முயற்சியாலும் பெற்றோர் ஆசிரியர்களின் முயற்சியாலும் மகா வித்தியாலயமாகப் பரிணமித்து இன்று நூற்றாண்டு விழாக் காணுகின்றது. இக்கல்விக்கூடம் மேலும் வளர்ந்து வருங்கால மாணவரின் கல்விப்பசியைப் போக்க வழிசெய்யவேண்டும் என்று இறைவனின் நற்றருள் தொழுகின்றேன்.

# மேலும் பல்லாண்டு வாழ்க

திரு. சு. சிவநாயகமூர்த்தி B. A. (Ceylon), S. L. E. A. S. III
(வட்டாரக் கல்வி அதிகாரி, நல்லூர்)

சைவவழி வந்து நூறுவது ஆண்டைக் கொண்டாடும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு சமுதாயத்தின் வழிவழி வந்த சமயப்பண்பாட்டு விழுமியங்களையெல்லாம் புறக்கணித்து அதற்கு முற்றிலும் புதிய சமய, பண்பாட்டு நெறிகளை அறிமுகம் செய்வதற்கென்றே திட்டமிட்டுக் கல்வி வழங்கப்பட்ட ஒரு காலகட்டத்தில், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தோன்றினர்கள். எம்முன்னேரின் விழுமியங்களைவையென நினைவூட்டித் தம் காலத்தவரை விழித்தெழவைத்த அப்பெருந்தகையின் வழிகாட்டலிலே தொடங்கப் பெற்ற சைவப் பாடசாலைகளில் ஒன்றுதான் கோண்டாவில் சைவத் தமிழ் வித்தியாசாலை.

இக்கல்விக்கூடம் அதன் ஸ்தாபகரான பிரமஸ்ரீ வேங்கடாசல ஐயரின் உள்ளம்போலவே பரந்தும் விரிந்தும் இன்று சைவ மகாவித்தியாலயமாக மேலோங்கியிருப்பது கோண்டாவில் வாழ் மக்களுக்குமட்டுமல்ல யாழ்ப்பாணம் முழுவதற்குமே பெருமையும் மகிழ்ச்சியுமாகும்.

கோண்டாவிலில் இந்து மகா வித்தியாலயம் என்ற பெயருடன் இன்று ஆயிரம் மாணவர்களையும் முப்பது ஆசிரியர்களையும் கொண்டு ஒரு சிறந்த கலாநிலையமாக இப்பாடசாலை திகழ்கின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர், பெற்றேர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் என்போரது ஒத்துழைப்பிலும் கூட்டுமுயற்சியிலுமே தங்கியுள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களை, உழைப்பவர்களை நாம் என்றும் நினைவுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இப்பாடசாலை ஒரு சிறந்த அதிபரால் வழிநடத்தப்படுவது பெருமைக்குரியதே. இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த கல்விமானும் தமிழ்ப்பற்றும், சைவப்பண்பாடும் நிறைந்தவருமாவர். இவருக்கு முன்னிருந்த அதிபர்களால் வழிநடத்தப்பட்ட இப்பாடசாலையை இன்று இவர் தமது தலைமையில் சிறப்புற நடாத்திவருவது பெருமைக்குரியதாகும். நூற்றுண்டு விழாக் கொண்டாடும் இந்நேரத்தில் சிறந்த ஒரு அதிபரையும் நல்லாசிரியர் குழாத்தையும் ஒத்துழைப்பு நல்கும் தன்னலமற்ற பெற்றேராசிரியர், பழைய மாணவர் சங்கங்களையும்கொண்டு இப்பாடசாலை விளங்குவது போற்றுதற்குரியதாகும்.

இப்பாடசாலை மேலும் எல்லோரினதும் ஒத்துழைப்புடன் சிறந்து, நம் சமுதாயத்திற்கு நற்பணியாற்ற வாழ்த்துகிறேன்.

# சிறந்த உயர்தரக் கல்லூரியாகத் திகழ்க

## முன்னாள் அதிபர் திரு. இ. பொ. குமாரசாமி

எமது "கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்" நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக மலர் ஒன்று வெளிவருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி உறுகின்றோம். யாழ்ப்பாணத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மரபில் பல கிராமங்களிலும் பல சைவத் தமிழ்ப் பெரியோர்கள் பாடுபட்டுழைத்தார்கள். கோண்டாவிலிலும் அயற் கிராமங்களிலுமுள்ள சைவத் தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் சமயத்தையும், தாய்மொழியையும் நன்கு பயில்வதற்கு உதவியாக பிரமஸ்ரீ வேங்கடாசல ஐயர் என்ற பிராமணோத்தமர் 1878ம் ஆண்டு ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தி வந்தார்.

ஆரம்பத்தில் இரண்டு பரப்புக் காணியில் ஒரு கொட்டிலில் வளர்ந்த "ஐயருடைய பள்ளிக்கூடம்" 1892இல் அரச அங்கீகாரம் பெற்றதுடன் ஐந்தாம் வகுப்புவரையுள்ள ஆரம்பப் பள்ளியாக மலர்ந்தது. பின்னர் முறையே கனிஷ்ட பாடசாலையாகவும், சிரேஷ்ட பாடசாலையாகவும் வளர்ச்சிபெற்றதுடன் ஆசிரியர்கள் பயிற்சிபெறும் சாதனா பாடசாலையாகவும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர் தொகை கூடக்கூட ஆசிரியர் தொகைகளும் கூடியதுடன் மாணவ ஆசிரியர்களும் உருவாக்கப்பட்டனர். காணிகளும், கட்டிட வசதிகளும் மற்றும் வேண்டிய சகல வசதிகளும் ஊர்மக்களாலும், ஏனைய பெரியோர்களாலும், உபகரிக்கப்பட்டு மகாவித்தியாலயம் என்ற அந்தஸ்தையும் பெற்றமை இன்று சரித்திரமாகும்.

இன்று கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் இப்பகுதியின் கலங்கரை விளக்கமாக கல்விக்கதிர்களைப் பரப்பிவருகின்றதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். சைவத் தமிழ் மக்கள் இக்காலங்களில் பலவகைகளிலும் கஷ்டமுள்ளவர்களாக வாழுகின்றார்கள். அவர்களுக்கு மன ஆறுதலளிக்கவல்ல இந்த வித்தியாலயங்கள் சிறப்புற்று விளங்கவேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்கின்றேன். "கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் சிறந்த உயர்தரக் கல்லூரியாக வளர இறைவன் துணையாகட்டும்" என்று அவரையே வேண்டி எனது ஆசிகளைக் கூறுகின்றேன்.

ஆசிரியர் தலையங்கம்

# வளர்ச்சிப் பாதையில் நாம்

எங்கள் வித்தியாலய வரலாற்றில் 1986 ஆம் ஆண்டு பொன்னானது. இவ்வாண்டிலே தான் எமது வித்தியாலய அன்னைக்கு நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாடுகிறோம்.

திண்ணைப்பள்ளியாக உருவெடுத்துச் சைவ மக்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் நூற்றெட்டு ஆண்டுகளாகப் பேணிப் பாதுகாத்து மகா வித்தியாலய நிலைக்கு வளர்ந்து நிற்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் "இந்து தீபம்" எனும் சஞ்சிகையை வெளியிடுவதில் நிறைவு காண்கிறது.

மாணவரின் ஆளுமை வடிவங்களை — தனியார் வேறுபாட்டு - நிலைகளைக் கருத்திற் கொண்டு கல்வி அநுபவங்களை ஒழுங்குபடுத்தி வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் எமது வித்தியாலயம் திட்டமிட்டுச் செயற்படுத்தும் வழிதுறைகள் வாயிலாகப் பொங்கிவரும் அறிவுப் பொக்கிஷத்தை மாணவர் சமுதாயத்துக்குத் திருப்திகரமாகக் கையளித்து வருகின்றது. துறைகள் அனைத்தையும் தழுவிய முழுமையான கல்வியை வகுப்பறைப் பாடங்கள் மட்டும் நிறைவு செய்ய இயலாதென்பது கண்கூடு. கால மாற்றங்களுக்கேற்பப் புதிய புதிய செயற்பாடுகள் கல்வியில் தோற்றம் பெறுகின்றன. இந்த இடையறு முயற்சியில் ஈடுபட்டு மெய்வருந்த உழைக்கும் கல்வி நிறுவனங்களே முதன்மை நிலையை எட்டுகின்றன.

வளர்நிலையடைந்து வரும் எமது இந்து மகா வித்தியாலயம் கோண்டாவிற் கிராமத்தில் உருவாக்கப்பட்டபோதிலும், அயற்கிராமங்களில் வாழும் சிறார்களுக்கும் ஓர் அறிவூட்டும் ஆலயமாகவே இன்றும் இருந்து வருகிறது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவ்வித்தியாலயத்தில் கற்றுத்தேறி ஈழத்தில் மட்டுமன்றிக் கடல்கடந்த நாடுகளிலும் இன்று சிறப்பான பதவிகளை அலங்கரிக்கின்றனர். பழைய மாணவர்களின் பட்டியலொன்றினை இம்மலரின் இறுதியில் இணைத்துள்ளோம். இத்தொடக்க முயற்சி காலவோட்டத்தில் பூரணமாக்கப்படவுள்ளது. பழைய மாணவர்களின் தொடர்புகள் வலுவடைகின்றபோதே இப்பட்டியல் திருப்திகரமாக அமையுமாதலால் தொடர்புகளுக்கான ஒத்துழைப்பை வித்தியாலயம் நாடி நிற்கிறது.

தொடர்பை ஏற்படுத்தவல்லது கல்வி. யாழ்ப்பாணத்துக்கு உலக அரங்கில் தொடர்பையும் பெருமையையும் தேடித்தந்ததும் கல்வியே. படித்தவர்கள் செறிந்து வாழும் பகுதியெனப் பெயரீட்டக் காரணம் இங்குள்ள கல்விக் கூடங்களாகும். ஆலயங்களையும் வித்தியாலயங்களையும் இரு கண்களெனப் போற்றும் பெற்றோர், தாம் பெற்ற செல்வங்கள் கல்வி கேள்விச் சிறப்புடையராதல் வேண்டும் என்ற ஊக்கத்துடன் செயற்படுவதும், இன்றும் ஆசிரிய சேவையைப் புனித சேவையெனத் தன்னலங்கருதா நல்லாசிரியப் பெருமக்கள் பணிபுரிவதும், மேலாகச் சோதனைமேல் சோதனைகள் தோற்றுவிக்கப்பட்டபோதும் பணிவுடனும், மாணவப் பண்புடனும், அறிவைத் தேடுவதே தம் வாழ்வின் குறிக்கோளெனக்கொண்டு கல்வி நிறுவனங்களைத் தேடி ஓடி மாணவர்கள் ஆய்ந்தறிவதும் யாழ்ப்பாண மண்வாசனையென்றே கொள்ளுதல் வேண்டும்.

வருந்திக்கற்கும் மாணவர்களை வருங்காலச் சமுதாயத்தை உருவாக்க வல்ல சிற்பிகளாக்கும் புனித கைங்கரியத்தில் இடையீடின்றி முயன்று வரும் கோண்டாவில் இந்து மகா வித்தி


யாலயம் அங்க சம்பூரணமான நிலைக்குயரும் பக்குவத்தையடைந்துள்ளது. இப்பக்குவநிலை யின் ஆக்கபூர்வமான கன்னி வெளியீடே "இந்து தீபம்" என்னும் இச்சஞ்சிகை. இச்சஞ்சிகை உள்ளடக்கிய — வித்தியாலய வரலாற்று வடிவமும்; சாதனைகள் சமைத்த அதிபர்களின் சேவைகளின் தொகுப்பும்; அளப்பரிய கல்வித்தொண்டினை மேற்கொண்ட நல்லாசான்களின் பால் நினைவெழுந்த கவிமாலையும்; வித்தியாலயத்தின் கருது கோளைப்பளிச்சிடும் அறிக்கை களும்; கல்விமான்களின் வாழ்த்துரைகளும்; பள்ளி ஆசிரியர்களின் எழுத்தோவியங்களும்; வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்தின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக் கோலங்களும் வித்தி யாலய வளர்ச்சி தங்கு தடையின்றித் தொடரத் தென்பூட்டுவனவாக அமைகின்றன.

'இந்து தீபம்' ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் இந்நாள் சிறார்களின் மனநிலையைச் சீர்செய்ய வேண்டிநிற்கும் காலமாகும். தோன்றியுள்ள சூழலில் பொருத்தப்பாடடைவதென்பது உளம் சார்ந்த ஒன்று. மலைக்காது மனத்திடமும் சூழ்நிலையை எதிர்கொள்ளத்தக்க மனச் சுகா தாரத்தை வழங்கும் பொறுப்பு வேறொன்றுமில்லாதவாறு அமைவதனல் உடல் விருத்தி, உளவிருத்தி, இரசஞான விருத்தி, செய்திறன் விருத்தி, சமூக இசைவாக்க விருத்தி, சமய சன் மார்க்க விருத்தி ஆதியாம் அம்சங்களில் கருத்தூன்றுதல் செய்தல் கல்வி நிறுவனங்களின் தலையாய கடனாகும்.

எமது வித்தியாலய மாணவர்களைப் பொறுத்த மட்டில் 'இந்து தீபம்' அறிவையும், சுவையையும் ஒருங்கே ஊட்டவல்ல தகவல்களை உள்ளடக்கி வெளிவருகின்றது. பள்ளிச் சிறுவர்களின் மனதில் துளிர்க்கும் ஆக்கத்திறன்களில் அவர்களை ஈடுபட வைப்பதால் மன நிலைச் சிக்கல்களிலிருந்து அவர்களை 'இந்து தீபம்' விடுவிக்க முனைகிறது. வாசிக்கும் இரசனை ஓங்கியுள்ள இன்று கண்டும் கேட்டும், என்றும் அறிந்த கருவூலங்களை எழுத்தோவியங்களாக் கும் வித்தைக்குக் களம் அமைத்துத் தரும் 'இந்து தீபம்' மாணவர்களின் மனவெழுச்சிக் கோலங்களைச் சமன் செய்யும் சாதனமாகவும் அமையும் என்பது திண்ணம்.

எமது வித்தியாலய வரலாற்று ஏடாக அமையக் கூடிய 'இந்து தீபம்' பாடசாலைச் சிறார்களையும், ஆசிரியர்களையும், பழைய மாணவர்களையும், பெற்றோர்களையும் ஒருங்கிணைத்து வித்தியாலய வளர்ச்சிக்கு எழுச்சியூட்டும் என்பது துணிபு. நூற்றேழு ( 107 ) ஆண்டுகளுக்கு முன்பு, இவ் வித்தியாலயத்தை ஸ்தாபித்தவர்களின் புனிதமான சிந்தனையைச் செயற்படுத்து வோம். சைவநெறி நின்று மானிடத்தை நேசிக்கும் மனம் கொண்ட சிந்தனையாளர்களையும், அறிவாளிகளையும், செய்திகள் மிக்க பலரையும் உருவாக்கும் கலைக் கூடமாக்குவோம். இக் கிராம சமுதாயத்தின் ஆணிவேர் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் என்ற உணர்வு மேலிட இதன் வளர்ச்சி எமது குடும்ப வளர்ச்சியெனக் கொண்டு தொண்டாற்ற வேண்டு மென்ற செய்தியை 'இந்து தீபம்' வாயிலாக அனைவருக்கும் வழங்குகின்றோம்.

வாழ்க எம் அன்னை. வளர்க எம் குறிக்கோள்.



அதிபர்

திரு. க. சொக்கலிங்கம் *M.A., S.L.E.A.S.*



துணையதிபர்

திருவாட்டி ச. முருகையா *B. A.*



## ஆசிரியர்கள்

நிற்போர்: திரு. ஆ. விவேகானந்தன், திருமதி வ. பரமேஸ்வரநாதன், செல்வி நா. சேனுதிராசா, திருமதி சா. தில்லையம்பலம், செல்வி செ. சின்னத்துரை, திருமதி நி. நவரத்தினராசா, செல்வி சி. தர்மலிங்கம், திருமதி ல. சிவராஜா, திருமதி ச. கிருஷ்ணனந்தா, திருமதி செ. பொன்னம்பலம், செல்வி பா. மார்க்கண்டு, திருமதி ச. சிவபாலன், திரு. இ. அருணாசலம்.

அமர்ந்திருப்போர்: திருமதி த. குமாரசாமி, திருமதி க. ஆறுமுகம், திருமதி அ. தனேஸ்வரன், திருமதி ஈ. நமசிவாயம், திரு. சு. தில்லையம்பலம், திரு. க. சொக்கலிங்கம் (அதிபர்) திருமதி ச. முருகையா (உப அதிபர்) திருமதிகள் அ. தம்பிராசா, இ. செல்லத்துரை, த. துரைரத்தினம், திருமதி ஜா. முத்துக்குமாரு, திரு. தி. நடராசா.

சமுகமளிக்காத ஆசிரியர்கள்: திரு. து. பாலசிங்கம், திருமதி ச. சின்னத்தம்பி, திருமதி த. செல்வரத்தினம்.

# அதிபர் பக்கம்

"மனிதர்கள் வருவார்கள், போவார்கள், நாமோ எப்பொழுதும் சென்றுகொண்டேயிருப்போம்" என்று ஆறு கூறுவதாக ஆங்கிலப் பாடல் ஒன்று உண்டு. கல்வி நிறுவனங்களுக்கு வாய் இருந்தால் அவையும் இதனையே சொல்லும். ஆசிரியரும் மாணவரும் அதிகாரிகளும் வருவார்கள், போவார்கள். ஆனால் பாடசாலைகளோ எக்காலமும் தொடர்ந்திருந்து இயங்கி நிலைத்தபணி புரிகின்றன.

1878ஆம் ஆண்டு தொடங்கியதொரு திண்ணைப்பாடசாலை, நூற்றாண்டுகளையும் தாண்டி வளர்ந்து, இன்றும் வளர்ச்சிப் பாதையிலே பீடுநடை போடுவது பெரிதும் போற்றத்தக்கதொன்று.

'முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பரம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'

என்று மணிவாசகர் இறைவனை விதந்தோதுவதுபோல, நாமும் எமது வித்தியாலய அன்னையை விதந்து போற்றி, அவள் நமக்கு ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து, நன்றி பாராட்டவே இன்று அவளுக்கு நூற்றாண்டு விழா எடுக்கின்றோம்.

'நினைவு நல்லது வேண்டும், நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்' என்றான் பாரதி. எங்கள் நினைவுகளைத் தூய்மையாக்கி அந்த நினைவு மலர்களையே மாலையாக்கி எம் அன்னைக்குச் சூட்டி மகிழவே **இந்துதீபம்** ஏற்றப்படுகின்றது. அதன் ஒளியிலே எம் ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாவரும் தம் குறிக்கோளாகிய கல்வி, பண்பாடு, ஒழுக்கம், சமயநெறி, தூயவாழ்வு ஆகிய பொருள்களை நெருங்கி அடைய எல்லாம்வல்ல எம்பெருமான் அருள்புரிவானாக.

நீண்ட நெடும் பாதையில் நடந்துவந்துள்ளோம். ஏற்றமும், இறக்கமும், துன்பமும், இன்பமும், வளர்ச்சியும், தேய்வும், வாழ்வும், தாழ்வும் கண்ட உன்னத பரம்பரையோடு உறவுகொண்டாட நாம் உரிமையுடையோம். இந்த உரிமையே எமது அருஞ்செல்வம்; எய்ப்பில் வைப்பு, இதனை எம் உயிரெனப் போற்றி, இனிவரும் பரம்பரையினருக்கும் உரிமையாக்க நாம் உறுதிபூண்போம். இந்நூற்றாண்டு விழா இவ்வுறுதியின் வெளிப்பாடு என்பதை அனைவர்க்கும் நினைவூட்டுவது எனது கடன்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'. எம்மிடையே குறைகள் பல இருக்கலாம். ஆனால் குறைகளை மறந்து எம்மில் சிறிது சிறிதாய் உள்ள நிறைகளை எல்லாம் ஒன்று கூட்டி ஒரு மனத்துடன் செயல்புரிந்தால், மகாவித்தியாலயம் மாபெரும் வித்தியாலயமாய் உயராதா? 'ஆசைபற்றி அறையலுற்றேன்'. இந்த ஆசை எல்லாரிடையிலும் பற்றிப் படர்ந்து இறுகி உறுதி பெறுவதாக. இந்த உறுதியில், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் மேலும் மேலும் வளர்ந்து கோண்டாவில் வாழ் சைவமக்களின் இளம் பரம்பரையினருக்குக் கலைகண்ணாய் அமைவதாக.

நூற்றாண்டு விழாவிலே பங்குகொண்டு அயராது உழைத்து அதன் வெற்றிக்குக் காரணமாய் அமைவோருக்கும், நூற்றாண்டு கொண்டாடும் நிலைக்கு எம்மை வைத்த முன்னோர்க்கும், அவர்களின் கைம்மாறு கருதாப் பணிகளுக்கும், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயச் சார்பில் இதயங்கனிந்த நன்றிகூறி அமைகின்றேன். வணக்கம்.

# பாடசாலை வளர்ச்சிக்கு
# வாரி வழங்கியோர்

1. சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா
   (மில்க்வைற் அதிபர்)
   — தளபாடங்கள் அன்பளிப்பு

2. திரு. பொ. நடராசா
   (அண்ணா கோப்பி அதிபர்)
   — தளபாடங்கள் அன்பளிப்பு

3. எஸ். மகேந்திரம்
   (பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, நாவற்குழி)
   — கிளாஸ் அன்பளிப்பு

4. திரு. ச. மார்க்கண்டு
   (விமாகி அதிபர்)
   — தண்ணீர்ப்பைப்பு குழாய்கள் அன்பளிப்பு

5. திரு. சி. புவனேந்திரன் — மலசலகூடம் கட்டியுள்ளார்

6. திருமதி ல. சிவராஜா — திறந்தவெளி அரங்கமைப்பு

7. பிரமஸ்ரீ ச. ஸ்ரீஸ்கந்தராஜசர்மா — திறந்தவெளி அரங்கமைப்பு

8. ஆசிரியர்கள், மாணவர்கள் — தளபாட அன்பளிப்பு

9. திரு. செ. இராசதுரை — தளபாட அன்பளிப்பு

10. திரு. வி. சிவகுமார் — தளபாட அன்பளிப்பு

11. திரு. க. கணேசராசா — கட்டடத் திருத்த அன்பளிப்பு

100வது ஆண்டு வாழ்த்துக்கள்

# NIRU TUITION CENTRE

**STATION ROAD — KONDAVIL.**

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

## O/L காலை, மாலைநேர வகுப்பு. பகல் முழுநேர வகுப்புகள்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | இந்திரன், A. M. வாசகர் |
| சமூகக்கல்வி | — | வேலாயுதபிள்ளை, மஃறூப் |
| தமிழ் | — | பண்டிதர் இராசையா, ராஜேந்திரா |
| ஆங்கிலம் | — | ரவி, தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — | நவம் |
| சமயம் | — | பண்டிதர் இராசையா |
| சுகாதாரம் | — | உமாதேவி |
| விவசாயம் | — | சொர்ணம் |

## 9ம், 8ம், 7ம், 6ம், 5ம் வகுப்புக்களும்

திறமைமிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.

## A/L 87, 88ம் ஆண்டிற்கான

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்.

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | —சின்னத்தம்பி | பௌதிகம் | —சௌந்தி |
| கணக்கியல் | —மரியதாஸ் | இரசாயனம் | —செல்வா |
| வர்த்தகம் | —தேவா | விலங்கியல் | —ஞானேந்திரன் |
| இந்து நாகரிகம் | —அருள்நங்கை | தாவரவியல் | —பாலா |
| புவியியல் | —வேலாயுதபிள்ளை | தூய பிர. கணிதம் | —A. பத்மநாதன் |
| அளவையியல் | —S. S. மனோகரன் | | |
| தமிழ் | —ராஜேந்திரா | | |
| அரசியல் | —மஃறூப் | | |

விபரங்கட்கு: நிர்வாகி

நாடுங்கள்

ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்

மோட்டார் கார், சைக்கிள்
உப உறுப்புகள் விற்பனையாளர்

தாவடி,
கொக்குவில்,

அன்பளிப்பு

பரணி மருந்துச்சாலை

456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

With Best Compliments from:

JAFFNA TRADING COMPANY

FURNITURE PALACE

79, KASTHURIAR ROAD - JAFFNA.

யாழ்ப்பாணம் ரேடிங் கொம்பனி

இன்றைய நாகரிகத்திற்கேற்ற சகலவிதமான வீட்டுத் தளபாடங்களுக்கும்
CEYESTA, ARPI FOAM, SUPER FOAM, தும்பு மெத்தை, பஞ்சு
மெத்தைகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

குறிப்பு:
சகலவிதமான ஓடர்களுக்கும் இங்கே
தளபாடங்கள் செய்து கொடுக்கப்படும்.

Branch:
KALA BHAVANAM
THAVADY SOUTH,
KOKUVIL.

கல்வித் துறையிலே பீடு நடைபோடும்
கோண்டாவில்
இந்துமகா வித்தியாலயத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்.

WELL KNOWN INSTITUTE
KONDAVIL.

நூறுண்டு கடந்த யா / கோண்டாவில்
இந்து மகாவித்தியாலயம்
மேலும் பன்னூறுண்டுகள் வாழ்க.

மேல்நாட்டு மருந்து வகைகளைச் சகாயவிலையிற் பெற நாடுங்கள்

கண்ணன் மருந்தகம்
காங்கேசன்துறை வீதி - யாழ்ப்பாணம்.



ரீவி வீடியோ—வீடியோ கசற்றுகள் வாடகைக்குப்
பெற்றுக்கொள்வதற்கும் ஓடியோ வீடியோ
றெக்கோடிங் மற்றும் அன்ரனு இணைப்பு
வேலைகள் சிறந்த முறையில் குறித்த
தவணையில் செய்து கொடுப்பதற்கும்
பழைய, புதிய திரைப்படங்களை
உடனுக்குடன் விநியோகிப்பதற்கும்
நாடுங்கள்

**கிருபா வீடியோ சென்ரர்**

கே. கே. எஸ். றேட் - சுன்னுகம்.

நூற்ருண்டு விழாக்
கொண்டாடும்
கோண்டாவில் இந்துமகா
வித்தியாலயத்தை
வாழ்த்துகிருர்கள்

○

**ஈஸ்வரி**
**ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர்: கே. பொன்னுத்துரை
காங்கேசன்துறை வீதி,
சுன்னுகம்.

பயிர்வகைகளை நாசம் செய்யும்
கிருமிகளைக் கொல்லும்
கிருமி நாசினி
விற்பனையில் புகழ்பெற்ற

**பிள்ளையார்**
**விவசாய சேவை**
**நிலையத்தினர்**

கோண்டாவில்
இந்துமகா வித்தியாலயத்திற்கு
வாழ்த்துத் தெரிவிக்கிருர்கள்.

காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

சகலவிதமான பலசரக்கு வகைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

○

"பாலன் ஸ்ரோர்ஸ்"

K. K. S. வீதி - சுன்னுகம்.

Visit

for

HIGH QUALITY

TOFFEES AND
SWEETS

SRI KANNA INDUSTRIES
SOTHIVEMBADY LANE,
MANIPAY.

உணவுற்பத்தியில் தன்னிறைவு
பெற
விளைச்சலை அதிகரியுங்கள்

விளைச்சலை அதிகரிக்க
எமது
இரசாயன உரத்தையும்
கிருமி நாசினியையும்
பாவியுங்கள்.

○

கமக்காரர் மாளிகை
சுன்னுகம்.

யாழ் / கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம் மேலும் பல நூறாண்டுகள்
வாழ்க என வாழ்த்துபவர்கள்

"வீனஸ்"

ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

கோண்டாவில் இந்து
மகா வித்தியாலயத்துக்கு

எம்
நல்வாழ்த்துக்கள்

இசான் ஹோட்டல்

கே. கே. எஸ். றோட்,
கோண்டாவில் மேற்கு.

பல்லாண்டு வாழ்க
படிப்பில் ஓங்குக!
வாழ்த்துபவர்கள்

டில்கா வாச்_வேக்ஸ்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பலசரக்குச் சாமான்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், விவசாய மருந்து வகைகள், மரக்கறி விதைகள் சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

இலங்கையின் எப்பாகத்திற்கும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு லொறி வசதி செய்துதரவும்,
நாடவேண்டிய இடம்

# ஆனந்தா ஸ்ரோர்ஸ்

இருபாலை வீதி - கோண்டாவில்.

கோண்டாவில்
இந்து மகா வித்தியாலயம்
மேலும் மேலும் கல்வியில்
வளர்ச்சிகாண

எமது நல்வாழ்த்துக்கள்.

ஃ

## சோதி ஸ்ரோர்ஸ்

கோண்டாவில் கிழக்கு.

சகல விதமான
மின்சார உபகரணங்களையும்
மலிவான விலையில் பெற்றுக்
கொள்வதற்கும்

மோட்டார் வைன்டிங்
செய்துகொள்வதற்கும்
நாடவேண்டிய இடம்.

ஃ

## OMEAX & SONS

ELECTRICALS AND
ELECTRICIANS
KONDAVIL EAST.

## பிள்ளையார் மரத்தொழிற்சாலை

குறைந்த செலவில்
வீட்டுத் தளபாடங்கள், வீட்டு வேலைகள்
தரமான முறையில்
செய்து கொடுக்கப்படும்.

## பிள்ளையார்
### மரத் தொழிற்சாலை

கோண்டாவில் சந்தி, பலாலி றோட்,
கோண்டாவில்,

உரிமையாளர்:
க. பஞ்சலிங்கம்
(தவனேந்திரன்)

## எமது நல்வாழ்த்துக்கள்

கோண்டாவில்
இந்து மகா வித்தியாலயத்திற்கு
உரித்தாகுக.

○

### துரைராசா ஸ்ரோர்ஸ்

இருபாலை வீதி - கோண்டாவில்.

## திருமணத் தலைப்பாகை

மற்றும்
றைகிளீன் செய்வதில்
வடமாகாணத்தில் 50 வருட
தேர்ச்சிபெற்றவர்கள்.

தங்களுக்குத் தேவையான சகல
தேவைகளுக்கும் நாடுங்கள்.

○

### "SAI DRY CLEANERS"

KONDAVIL EAST,
PALALY ROAD,
KONDAVIL.

கல்விக் கோயிலாய்க் கவினுற

மிளிர்ந்து

மேலும் பல்லாண்டு வாழ்க.

○

### சந்திரா ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

உங்களுக்குத் தேவையான சகல
உணவுப் பொருட்களும் மற்றும்
எவர்சில்வர், அலுமினியப்
பாத்திரங்களும்
மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.

## கார்த்திகா ஸ்ரோர்ஸ்

கோண்டாவில் கிழக்கு.

உரிமையாளர்:
ந. தனையசிங்கம்



உங்களுக்குத் தேவையான

பலசரக்கு

வகைகளையும்

சாய்ப்புச் சாமான்களையும்

பெற்றுக்கொள்ளலாம்.

## நடராசா ஸ்ரோர்ஸ்

ஸ்ரேசனடி - கோண்டாவில்.



உங்கள் மனங்கவர்ந்த பாடல்களை
ஒலிப்பதிவு செய்யவும்,

திருமணம்
முதலான மங்கலவைபவங்களுக்கு
ஒலி, ஒளி அமைக்கவும்
எம்மை நாடுங்கள்.

## "சத்தியா"

றெக்கோடிங் பார்
காங்கேசன்துறை விதி,
சுன்னுகம்.


நூற்றண்டு விழா சிறக்க
வாழ்த்துக்கள்

விஜய வர்மன்

நூற்றாண்டு காணும் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

மேலும் பன்னூறாண்டுகள் வாழ்க.

மா. வீரசிங்கம் - கோண்டாவில் மேற்கு

நூற்றுண்டு விழாக்காணும்

யாழ் - கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறேம்.

எங்களிடம்:-

தங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், பால்மாவகைகள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எந்தநேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

**NATHAN & BROTHER**

No. 2, K. K. S. ROAD,
CHUNNAKAM.

சகலவிதமான மளிகைப் பொருட்கள், பால்மா வகைகள் அனைத்தையும் சில்லறையாகப் பெற

நாடுங்கள்

**விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்**

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

உங்களின் உணவுத் தேவைகளுக்கான மளிகைச்சரக்குகளுக்கும்
பால்மா வகைகளுக்கும்

நம்பிக்கையான
இடம்

**மகேந்திரன் ஸ்ரோர்ஸ்**

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

எமது நல்வாழ்த்துக்கள்

எல்லாவிதமான பலசரக்குவகைகள், பால்மா வகைகள்,
மளிகைப்பொருட்கள் இங்கு சகாயவிலையில் கிடைக்கும்.

ஒருமுறை விஜயஞ்செய்யுங்கள்

## மயில்வாகனம் ஸ்ரோர்ஸ்

கோயில் வீதி – கொக்குவில்.

உங்களுக்குத் தேவையான சகல இரும்புச் சாமான்களுக்கும்
நாடவேண்டிய இடம்

## இந்திரா ஹாட்வெயர்ஸ்

கே. கே. எஸ். வீதி - கோண்டாவில்.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் யாழ் / கோண்டாவில் இந்து
மகாவித்தியாலயம் பல்கலைகளையும் கற்பிக்கும் கலைக்கோயிலாக
மிளிர்ந்து மேலும் பன்நூற்றாண்டு வாழ எனது வாழ்த்துக்கள்.

யோகேந்திரன்

# ZODIAC TERAAZZO WORKS

MANUFACTURERS OF TERAAZZO
FLOOR TILE & BATH ROOM FLOOR TILE

WE SPECIALISE IN:

## TERAAZZO FLOORING

மொசைக் நிலவேலைகளும் மாபிள் நிலவேலைகளும்
திறம்படச் செய்துகொடுப்பவர்கள்

*Branch:*
211, N. C. Road,
TRINCOMALEE.

Mr. T. Shamuvel
TPhone: 384

*Head Office:*
K. K. S. Road,
THAVADY,
KOKUVIL,.



நூற்றாண்டு விழாக் காணும்

யாழ் - கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து எமது தமிழ் மாணவ சமுதாயத்திற்கு நல்ல கல்விப்பணிகளை ஆற்றவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

டாக்டர் செ. பாலசுப்பிரமணியம்
தாவடிச் சந்தி – தாவடி.



எப்பொழுதும் நீங்கள் விரும்பும்

தங்க வைர

நகைகளை



திருப்தியுடன் பெறுவதற்கு

# ராணி ஆபரண மாளிகை

63, கன்னாதிட்டி (R G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

ஆடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

தொலைபேசி இல. 23544

---

பல்லாண்டு வாழ்க

**ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ்**

கோண்டாவில் மேற்கு,

கோண்டாவில்.

---

திருமணவிழா

புதுமனைப் புகுவிழா

முலியவற்றைச் சிறப்பிக்க

நாடுங்கள்

**கண்ணா பந்தல்**

**சுதன் கதிரை**

உரிமையாளர்:

சு. இ. ஜெகதீஸ்வரன் (ஆசை)

கோண்டாவில் மேற்கு.

நூற்றுண்டு விழாச் சிறக்க
எம் நல் வாழ்த்துக்கள்

**C. S. KANAGARETNAM**
102, Hospital Road,
JAFFNA,

எவர்சில்வர், அலுமினியம்,
அன்பளிப்புப் பொருட்கள்,
கோவில் சாமான்கள்
நியாயவிலையில் பெற்றிட
நாடவேண்டிய ஸ்தாபனம்

**சிவன் மாளிகை**
166, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய
நூற்றுண்டு விழாவிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்

**எஸ். சின்னத்துரை அன்ட் பிறதர்**
தொலைபேசி இல. 23703, 23183
39, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும் ◇

கர்ப்பத் தாய்மார்களுக்கும் ◇

பாலூட்டும் தாய்மார்களுக்கும் ◇

போசாக்குக் குறைவான குழந்தைகளுக்கும் ◇

ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு ◇

அதியுன்னத சத்துணவு **ஜீவாகாரம்**

விநியோகஸ்தர்கள்:

## அண்ணா தொழிலகம் - இணுவில்.

தொலைபேசி: 021 — 23412, 021 — 23413

வாழ்த்துகிறோம்

## விநாயகர் ஸ்ரோர்ஸ்

166, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.

# யாழ் / கோண்டாவில் இந்து மகாவித்தியாலய ஆரம்பமும் வளர்ச்சியும்

## தோற்றம்

நூற்றெட்டு ஆண்டுகள் பூர்த்தியாகி, மகாவித்தியாலய தரத்தினை அடைந்துள்ள எமது கல்விக்கூடம் பிரமஸ்ரீ முருகேச ஐயர் - வெங்கடாசலஐயர் அவர்களால் திண்ணைப் பள்ளியாக ஸ்தாபிக்கப்பட்டது. ''பாடசாலையைத் திற, சிறைச் சாலையை மூடு'' என்னும் பொன்மொழிக் கொப்ப ஐயர் அவர்கள் ஏற்றிவைத்த தீபம் இன்று அகல்விளக்காகப் பிரகாசிக்கின்றது. அவர் நாமம் நிலைக்கும்.

1878ம் ஆண்டு பங்குனி மாதம் 5ம் திகதி நொத்தாரிசு இ. வைத்திலிங்கம் அவர்களால் நிறைவேற்றப்பெற்ற உறுதிக்குரிய நான்கு பரப்பு விஸ்தீரணங்கொண்ட நிலத்தைக் கல்விப் பயிரை வளர்க்க விரும்பிய, கொடையுள்ளம் படைத்த திரு. வைரவநாதர் - இராமு அவர்களும், திரு. இராமநாதர் – ஆறுமுகம் அவர்களும் வித்தியாதானமாக வழங்கினர். வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் ''இது எங்கள் பாடசாலை'' என்ற உணர்வுடன் முதலாம் உபாத்தியாயராக அமர்ந்து சைவமும், தமிழும் தளிர்விட வகை செய்தனர்.

## அரச அங்கீகாரம்

''உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வி'' என உணர்ந்த முன்னோரின் அயராத உழைப்பின் பயனாக இப்பாடசாலை 1892இல் அரச அங்கீகாரம் பெற்று நன்கொடை பெறும் நிலைக்கு உயர்ந்தது. பத்து ஆண்டுகளாகச் சைவ வாழ்க்கைக் கோட்பாடுகளையும், இலட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டு சமூகத்தின் போக்கினை உருவாக்கிய இச்சைவ வித்தியாசாலை 1903ஆம் ஆண்டு பிரமஸ்ரீ இராமசாமி ஐயர் முத்தையர் அவர்களைத் தர்மகர்த்தாவாகப் பெற்றது. பாடசாலை ஸ்தாபகரும், கோண்டாவில் வாழ் பெருமக்களும் அன்னாருக்கு அநுசரணையாகப் பாடசாலையைப் பரிபாலிக்கவல்ல நிருவாகக்குழு ஒன்றினையும் உருவாக்கினர்.

## கனிஷ்ட பாடசாலை சிரேஷ்ட பாடசாலையானது

பாடசாலைப் பரிபாலனச் சிறப்பினால் ஐந்தாம் வகுப்புவரை இயங்கிவந்த நிலை 1915இல் கனிஷ்ட பாடசாலை நிலையை எட்டியது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்துவந்த முகாமையாளர்களின் முயற்சியால் கட்டட வசதிகள் பெருகிச் சிரேஷ்ட பாடசாலை அந்தஸ்துக்கு வளர்ச்சியடைந்தது.

1928இல் கல்வி இலாகா கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவிக்க அங்கீகாரம் அளித்தது. வித்தியாசாலையின் வளர்ச்சிப் போக்கில் துரிதமேற்பட்டது. குறிப்பாக இவ்வருடம் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு சாதனப் பாடசாலையாகவும் இது ஆக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் பாடசாலையின் முகாமைத்துவத்தை அலங்கரித்த நீர்வேலிச் சங்கர பண்டிதர் – சிவப்பிரகாச பண்டிதர், 'இந்துசாதனம்' மனேஜர் திரு. சி. கந்தையாபிள்ளை, திரு. சி. நா. பொன்னையா ஆகியோரின் சேவைகள் வித்தியாலயத்தின் வரலாற்றில் அழியா இடம் பெற்றுள்ளன.

## சைவ வித்தியாசாலை தமிழாசிரியர்களை உருவாக்கியது.

வித்தியாசாலையின் விஸ்தீரணத்தை விசாலிக்க 1932ல் ஒன்றரைப் பரப்பு நிலமும் 1938ல் ஏழு பரப்பு ஏழேகாற் குழி நிலமும் வாங்குவதற்கு மதிப்புக்குரிய திரு. சி. ஆறுப்

பிள்ளை அவர்கள் பெரிதும் உதவினர். வித்தியாசாலை ஆசிரியர்கள் இம்முயற்சி நிறைவு பெறப் பெருமளவில் கைகொடுத்துதவினர். மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். க. பொ. த. பத்திர வகுப்புடன் மாணவ ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர் நிலைக்கு உயர்வதற்கு இவ்வித்தியாசாலையில் கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

### பள்ளிக்கூடப் பிரதான மண்டபம்

திரு. சி. நா. பொன்னையா அவர்களைத் தொடர்ந்து, திரு. மு. கனகசிங்கம் அவர்கள் பாடசாலையின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றுப் பள்ளிக்கூடத்தின் பிரதான கட்டடத்தை அமைக்கப் பெரும்பணியாற்றினர். தலைமை ஆசிரியராக விளங்கிய உயர்திரு. மு. பெரியதம்பி அவர்களுடைய தலைமைத்துவம் பொன்னனது. அன்னாரின் சேவையால் நற்கனிமரம்போலக் கோண்டாவிற் கோட்டத்தின் நடுவில் பொலிந்து இப்பாடசாலைப் பிரதான மண்டபம் கவின்பெற அமைந்தது. இக்கட்டடம் இன்று இல்லை. அதே இடத்திலேயே மேல்மாடிக் கட்டடம் இன்று எழுந்துள்ளது. மனேஜர் திரு. மு. கனகசிங்கம் அவர்கட்குத் திரு. நா. திருநாவுக்கரசு அவர்கள் உதவியாக உழைத்தனர்.

கல்வி அநுபவ ஒழுங்கமைப்பைக் கூட்டு முயற்சியாக்கிப் பல்வேறு ஆசிரியர்களின் திறன்களைப் பயன்படுத்தியதன் விளைவாக வித்தியாசாலை வெற்றிநடை பயின்றது. 1950ஆம் ஆண்டு பாடசாலை வளர்ச்சியில் ஒருபடி முன்னேற்றம் கண்டது. இக்கால கட்டத்தில் மனையியல், சங்கீதம், சித்திரம், நெசவு போன்ற கல்வித்துறைகள் புகுத்தப்பட்டன. மாணவர் தொகை அதிகரித்ததன் விளைவாக நல்லாசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பெற்றுக் கற்பித்தல் வளப்படுத்தப்பட்டது.

### ஒரு திருப்பம்

பாடசாலைப் பரிபாலனத்தில் 1952இல் ஒரு திருப்பம் ஏற்பட்டது. புதிய நிருவாக சபை நியமனம் பெற்றது. நிருவாக விதிமுறைகள் புதுப்பிக்கப்பட்டன. இப்புதிய ஏற்பாட்டின்படி நிருவாகசபை, ஊராரின் ஒத்துழைப்புடன் உத்வேகமாக உழைக்கத் தொடங்கியது. பத்து ஆண்டுகள் துரித முன்னேற்றம் பெற்ற இவ்வித்தியாசாலை மகா வித்தியாலயக் கோரிக்கையை முன்வைத்து வளர்ச்சிப் பாதையில் வேகநடை போடத் தொடங்கியது. இக்காலப் பகுதியில் பாடசாலைத் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நிருவகித்த அதிபர் திரு. இ. பொ. குமாரசாமி அவர்களின் சேவை போற்றுதற்குரியது. அன்னாருக்கு அனுசரணையாக உப அதிபர் திரு. மு. இளையதம்பி அவர்களும் ஆசிரியர்களும் அளப்பரிய சேவையாற்றினர்.

### அரசாங்கம் பொறுப்பேற்றது

அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றதும் மகாவித்தியாலயக் கோரிக்கை வலுப்பெற்றது. இக்கோரிக்கையை நிறைவு செய்ய வித்தியாசாலையை அங்க சம்பூரணம் ஆக்கும் முயற்சியில் பாடசாலைச் சமுதாயம் ஈடுபட்டதன் பயனாக விஞ்ஞான அறையும், அதற்குரிய உபகரணங்களும் பெறப்பட்டதுடன் விஞ்ஞானக்கல்விக்கும் வித்திடப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளுள் தனித்துவமான இடத்தை இது எட்டுவதற்கு இதன் புறக்கிருத்தியச் செயற்பாடுகளே காரணமாகும். ஆசிரியர்களின் தன்னலமற்ற மேன்மையான சேவையால் வித்தியாசாலை முழுமை பெற்றது.

சொற்பகாலம் திரு. செ. நாகலிங்கம் அவர்கள் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றினும், கல்வி முன்னேற்றத்தில் முழுநேரத்தையும் செலவு செய்தமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுப் பாடசாலையை நிர்வகிக்க உதவிய உப அதிபர் திரு. ஆ. திருநாவுக்கரசு அவர்களின் தொண்டு நினைவில் நிற்கிறது.

### மேல்மாடிக் கட்டடம்

வித்தியாலயத்தின் இன்றைய கவினுறு தோற்றத்திற்குக் கால்கோளிடப்பட்ட

ஆண்டு 1972 எனக் கொள்வது சாலப் பொருந்தும். 1962லிருந்து அடுத்த பத்தாண்டுத் திட்டமாக மலர்ந்த முயற்சியின் திருவினையே இவ்வாண்டில் பாடசாலையின் பழம்பெரும் மண்டபம் இருந்த இடத்தில் இடம்பெற்ற மாடிக்கட்டடம். பாடசாலை சார்ந்த சமுதாயத்தை ஒன்றுதிரட்டி இம் முயற்சியில் ஈடுபடச்செய்த பெருமைக்குரிய அதிபர் குப்பிழான் திரு. செ. நடராசா அவர்களாவர். இக்கைங்கரியம் வடிவம்பெற கிராமமே முழுமையாக உழைத்தது. வடமாகாண அரசியலதிகாரியாக விளங்கிய நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு. சி. அருளம்பலம் அவர்களும், யாழ் பெற்றூர் ஆசிரியர் சங்கம் யாழ். கொழும்புக் கிளைகள், பழைய மாணவர் சங்கம், வித்தியாலய ஆசிரியர் கழகம் ஆகிய ஸ்தாபனங்களும் மற்றுமுள்ள நலன்விரும்பிகளும், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களும் மேல் மாடிக் கட்டட அமைவுக்கு ஆற்றிய பங்களிப்பு என்றும் நினைவுகூரத் தக்கது.

உப அதிபர் திரு. ஆ. திருநாவுக்கரசுவைத் தொடர்ந்து திருமதி ச. முருகையா அவர்கள் உப அதிபர் பதவியில்பணிபுரிகின்றூர்.

### நால்வர் திருவுருவ விக்கிரகங்கள்

வித்தியாலய வளர்ச்சியுடன் ஒருசேர மாணவர் வரவும் பெருகியது. ஆசிரியர்கள் தொகை முப்பதாக உயர்ந்தது. கல்விச் சேவை செழிப்புற்றது. சைவம் வளர்த்த இக்கல்விக் கூடத்தின் மேல்மாடியில் பிரார்த்தனை மண்டபம் அமைந்துள்ளது. இவ்வழிபடுதலத்தில் அருள்மிகு அம்பலவாணர் சுவாமிகள் சந்ததியினரால் வழங்கப்பெற்ற திருமுறைச் செல்வர்கள் நால்வரின் விக்கிரகங்கள் நிறுவப்பட்டுக் குருபூசைகள் கிரமமாக நடாத்தப்படுகின்றன.

1976இல் அரச மானியத்துடனும் பெற்றூர் ஆசிரியரின் நிதியுதவியுடனும் நவீன மனையியற் கூடமும், வகுப்பறைப் பிரிசுவர்களும், பாலர் கல்விக்கூடத் தேவைகளும், மற்றும் மேலதிக சுகாதார வசதிகளும் உருப்பெற்றன.

### மகாவித்தியாலயம் ஆயிற்று

வித்தியாலயத்தின் கல்வித் தேவைகள் நிறைவுபெற்ற இக்காலவோட்டத்தில், நீண்டகாலமாகத் தொடர்ந்து எடுக்கப்பட்ட முயற்சியின் பலனாக, 22-7-82இல் நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. எம். சிவசிதம்பரம் அவர்களின் நடவடிக்கையின் நிமித்தம் கோண்டாவில் மேற்கு இந்து மகாவித்தியாலயமாக இது தரமுயர்ந்தது. இவ்வாறு தரமுயர்த்தத் திரு. சிவசிதம்பரம் அவர்களை இடைவிடாது வற்புறுத்தி ஊக்கிப் பயன்கொண்ட பெருமை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் சிறப்பாக அதன் அந்நாளைய செயலாளருக்குமே உரியது.

மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட வேளையிலே கரவெட்டியூர்த் திரு. வி. நடராசா அவர்கள் அதிபராகியிருந்தமை அறியத்தக்கது. பாடசாலையின் தரமுயரத் தலைமை தாங்கும் அதிபர்களின் தரமும் கல்விப் பகுதியால் கணக்கில் எடுக்கப்படுகின்றது. கல்விச்சேவைத்தரம்நான்கினைப் பெற்ற வித்துவான் க. சொக்கலிங்கம் M.A. அவர்கள் இன்று அதிபர் பதவியை ஏற்றமையால் வித்தியாலய மேம்பாட்டில் மாற்றம் ஏற்படும் அறிகுறிகள் தோற்றம்பெறுகின்றன.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், பாடசாலை வளர்ச்சிக்கும் இடையறு அக்கறையுடன் உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் சேவையுணர்வுடன் முன்னின்றுழைத்த நம்மூர்ப் பெரியார்களையும், பெருந்தகைகளையும் நன்றிப் பெருக்குடன் நினைவிருத்துவோமாக.

கல்லூரி மாதா கொலுவிருக்கின்றாள்.

# பாடசாலை உயர்வில் அதிபர்களின் பங்களிப்பு

செல்வி பா. மார்க்கண்டு B. A., Dip. in Ed.
(பகுதித் தலைவர்)

'மனிதன் இயல்பிலேயே மற்றையோருக்கும் பொதுவானவன்' என்பது சுவாமி இராமகிருஷ்ணருடைய கருத்தாகும். ஒவ்வொரு மனிதனதும் தனித்துவமானது சமுதாயத்துக்குப் பயன்படல்வேண்டும். எல்லோருக்குமுரிய மனிதன் சமுதாயத்தில் தனியாளின் அளவற்ற விஸ்தாரமாகிறுன். மக்கள் மத்தியில் பணிபுரிதல் கல்வியின் சமூகப்பணியாகின்றது.

மாணவர்களின் தன்னுணர்ச்சிகளையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதோடு, வளர்ப்பதற்கும் பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்பட்டன. வளரும் பிள்ளைகளை வளர்த்து அவர்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்தி பொறுப்புணர்ச்சி உள்ளவராக உருவாக்கி சமூகத்துக்கு அளிக்கின்றன.

இந்தவகையில் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தன் பணியை அளிப்பதற்குச் சுடர்விடத் தொடங்கியது. தன்பணி நிறைவில் நூற்ருண்டை இப்பாடசாலையும், இக்கிராம மக்களும் மட்டற்ற மகிழ்வுடன் கொண்டாடவும், பாடசாலைப்பணி தொடரவும் உழைத்தவர்கள் தலைமைத்துவப் பெருமக்களேயாகும்.

இந்நிலையில் இப்பாடசாலையின் ஆரம்பகாலத் தலைமைத்துவத்தின் பங்களிப்பைத் தெட்டத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியவில்லை. எனினும் பாடசாலையுடன் தொடர்புடைய பெரியார்களைக் கேட்டறிந்தபொழுது வெளியூர்க் கிராமங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே தலைமையாசிரியர்களாக இருந்திருக்கிருர்கள். இந்த வரிசையில் முதலில் நீர்வேலியைச் சேர்ந்த திரு, கதிரேசு ஆசிரியரும் அடுத்ததாகக் கரவெட்டியைச் சேர்ந்த திரு. சின்னையா ஆசிரியருமே ஆரம்பகாலத் தலைமை ஆசிரியர்களாக இருந்திருக்கிருர்கள். அவர்கள் பணிபற்றி குறிப்பிடமுடியாமற்போனுலும் அவர்கள் ஏற்றிய விளக்குகளே தொடர்ந்து இப்பாடசாலையில் குருசீடமுறையில் அறிவுவிளக்கேற்றிப் பிரகாசிக்கச்செய்துள்ளமை இங்கு நான் கூருமலே யாவரும் அறிவர்.

### திரு. மு. பெரியதம்பி

நூற்ருண்டு கண்டு மகாவித்தியாலயமாகத் தரமுயர்ந்து பல்வேறு சிறப்புகளுடன் பொலிவுற்று நிற்கும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு 1955ஆம் ஆண்டுவரையும் வித்திட்ட அதிபர்களின் வரிசையில் முதலில் என் மனக்கண்முன்னே நிற்பவர் திரு. மு. பெரியதம்பி அவர்களே.

பொன்விழாக் காணும் அன்றைய நிலையில் பணிபுரிந்த அப்பெரியார், பெரியபுராணத்தில் சுந்தரரைத் தடுத்தாட்கொள்ளக் கிழப்பிராமண வடிவத்தில் வந்த இறைவனைப்பற்றிச் சேக்கிழார் பெருமான் கூறுவது தான் என் மனதில் எழுகின்றது. நரைத்த தலை, குடுமி, நெற்றியிலே விபூதிப் பூச்சு, சந்தனப்பொட்டு, வெள்ளை வேட்டி, தோளில் உத்தரியம், கையில் பிரம்பு – இவ்வாறு தினமும் காட்சியளிக்கும் இவர் தம் செயற்பாட்டின் மூலம் சைவப்பாடசாலையின் சைவப்பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் வளர்த்தவர்.

தமிழையும், சைவத்தையும் தம் பணி நாட்களில் வளர்த்ததோடமையாது ஒழுக்கமுள்ள ஓர் சமுதாயத்தை இன்றைய சந்ததியினருக்கு அளித்துச் சென்ற பெரியார். இவர் மாணவர்களுக்கு தமிழ், இலக்கியம், சமயம் ஆகிய பாடங்களை ஆர்வமுடன் கற்பித்தவர். நாடகத்திலும் அவர்களை ஈடுபடுத்தி நாடகத்துறையை வளர்த்தவர்.

இரவுப் பாடசாலையை நடத்தி இப்பாட சாலை மாணவர்களும், தான் பிறந்த கிராம மான இணுவில் மக்களும் கல்வி அறிவுபெற வைத்தவராகும்.

அக்கால மாணவர்களை வழிநடத்திச் சென்ற ஆசிரியர்களது பணியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவந்தவர். புலமைப் பரீட்சைகளிலும், சிரேஷ்ட பாடசாலை தரா தரப்பரீட்சைகளிலும் இங்குள்ள மாணவர் கள் தோற்றிச் சித்தியடைந்தமையை நாம் உணரும்பொழுது ஆசிரியப் பணிமூலம் திருப்தி கண்டவர். இதன்மூலம் தமிழும் சைவமும் வளர்க்கும் ஓர் ஆசிரிய சமுதா யத்தை உருவாக்கிய பெருமை அவரையே சார்ந்துநிற்கின்றது.

மாணவர்களுக்கு கல்வியறிவு புகட்டு வதை நோக்கமாகக் கொண்டிருந்த பொழு திலும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவன்மீதும் அக்கறை காட்டியமையை அவர் எழுதிச்சென்ற குறிப்பேடுகளில் தெரி கிறது. போக்குவரத்து வசதியற்ற அக்கா லத்தில் மாணவர்களை கல்விச் சுற்றுலா போன்றவற்றுக்கும் அழைத்துச் சென்றமை அவர்களது அறிவை வளர்க்க எடுத்த நட வடிக்கைகளில் ஒன்றுக அமைகின்றது.

மேலும் அவரின் பணி பாடசாலையுடன் மாத்திரமல்ல பெற்ருேருடன் தொடர்பு கொண்டு மாணவர்களது நலன்களை அடிக் கடி தெரியப்படுத்துபவர். பெற்ருேர் தின விழாக்களை நடத்தி மாணவர்களது உள் ளார்ந்த சக்திகளை வெளிப்படுத்தி - பெற் ருேர்களையும் தம்பிள்ளைகள்மீது அக்கறை யெடுக்க வழிநடாத்தியவர் இத்தலைமை யாசிரியரே.

மாணவர்களிடையே உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடின்றி ஒற்றுமைகண்டு அதன் மூலம் கல்வி, ஒழுக்கம், பண்பாடு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு, நேர்மை கொண்ட ஓர் சமுதாயத்தை இப்பெரியார் உருவாக்கிச் சென்றமைக்கு பாடசாலை நூற் ருண்டைக் கொண்டாடும் இக்கிராமமும், அயற்கிராமங்களும் சான்று பகர்ந்து நிற் கின்றன. அந்நிலையில் நாமும் பாடசாலை யில் அவர் பணியைத் தொடர்கிருேம், தொடர இறையருள் கைகூடட்டும்.

### திரு. இ. பொ. குமாரசாமி

பெரியதம்பி உபாத்தியாயரின் மாணவ ராக இருந்து அவரின்கீழ் உதவி ஆசிரியர், உதவி அதிபராக இருந்த திரு. இ. பொ. குமாரசாமி அவர்கள் இப்பாட சாலையுடன் நீண்டகாலத் தொடர்புடைய வர் என்பது தெளிவாகின்றது. அத்தகைய ஓர் ஆசிரியர் பல்வேறு அநுபவங்களைத் தமது பிறந்த கிராமமான இக்கிராமத்தில் அமைந்த இப்பாடசாலைமூலம் பெற்றமை தலைமைத்துவப் பணியை எளிதாக்கிவிட் டது.

இவர் தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலத் திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தமை பாட சாலை நிருவாகத்தை ஒழுங்குபட அமைக்கக் காரணமாக இருந்தது. திரு. மு. பெரிய தம்பி தலைமையாசிரியர் பதவியிலிருந்து 1-1-56இல் ஓய்வுபெற அக்காலம் தொடக் கம் 1-12-1970ஆம் ஆண்டுவரையும் பாட சாலையை இவர் நிருவகித்து வந்துள்ளார்.

பாடசாலை வளர்ச்சியில் கூடிய அக்கறை காட்டியதற்கு இவரது காலத்தில் பரீட்சை களுக்கு தோற்றிய மாணவர்களது பெறு பேறுகளே சான்றுகளாக நிற்கின்றன. க. பொ. த. உயர்தரவகுப்பு இப்பாடசாலை யில் இல்லாத குறையினுல் இங்கு திறமைச் சித்தி அடைந்த மாணவர்கள் வேறு கல்லூரி களுக்குச் சென்று பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பட்டதாரிகளாகத் திகழ்கின்றனர்.

திரு. குமாரசாமி கல்வி வளர்ச்சியுடன் மாத்திரமன்றி பாடசாலையின் புறவளர்ச்சி யிலும் பாடசாலையின் மதிப்பை உயரச் செய் துள்ளார். விளையாட்டுப் போட்டிகளிலும் தனியார் நிறுவனங்களினுல் நடத்தப்படும் நிகழ்ச்சிகளிலும் மாணவர்களைப் பங்குபற் றச் செய்து பாடசாலையின் புகழை உயர்த்தி வைத்தவர் இவர்.

நான் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கு 1970ஆம் ஆண்டு நேர்முகப்பரீட்சைக்குக் கல்வி இலாகாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது எனது க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளில் சரித்திர பாடத்துக்கு விசேட சித்தி (D) கிடைக்கப் பெற்றிருந்தமையை நேர்முகப் பரீட்சையை நடாத்திய அதிகாரி வியந்துவிட்டு "எங்கு படித்தீர்?", என்று கேட்க நான் பாடசாலையின் பெயரைச் சொல்ல, உடனே "அவர் திரு. குமாரசாமியா அதிபர்?" என்று கேட்டு வியந்தார். இவ்விடத்தில் நான் இங்கு என் திறமையைக் கூற வரவில்லை, எனினும் அன்று சரித்திரப் பாடத்தை திறமையாகக் கற்பித்த திருமதி கோ. அன்ரனிராஜ் ஆசிரியரையும் இங்கு நினைவில் நிறுத்துகிறேன். எனவே பாடசாலைக்குப் புகழ் கிடைப்பது அதிபர்கள் மாணவர்களது கல்வியில் செலுத்தும் அக்கறையும், ஆசிரியர்களது ஒத்துழைப்புப் பெறுவதின் மூலமுமேயாகும்.

மேலும் மாணவர்களின் ஒழுக்கம், சமயப்பற்று, கடமையுணர்வு, ஆகியவற்றிலும் கண்ணும் கருத்துமாக இருந்து திரு. மு. பெரியதம்பி அவர்களின் கொள்கைகளைக் கடைப்பிடித்துப் பாடசாலையை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்ற பங்கில் இவருக்குப் பெரும் பங்குண்டு என்பதை இக்கிராம மக்கள் அறிவர்.

இப்பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரமுயரல் வேண்டும் என்று அன்று அவர் கொண்ட நினைவு இன்று தரமுயர்ந்து பல்வேறு சிறப்புக்களுடன் திகழ்கின்றது. நூற்றுண்டு கண்ட பாடசாலையின் வளர்ச்சிக்கு அன்னர் இன்றும் ஊக்கம் காட்டிவருவதை நாம் வியந்து பாராட்டி நிற்கிறோம்.

**திரு. செ. நாகலிங்கம்**

திரு. இ. பொ. குமாரசாமி அதிபரின் பின் பாடசாலையின் சிரேஷ்ட உதவி ஆசிரியரான திரு. செ. நாகலிங்கம் பதில் அதிபராக 1-3-73ம் ஆண்டுவரையும் கடமை யாற்றியுள்ளார்.

நிருவாகத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து பாடசாலை நலன்கருதி உழைத்தவர். இருவருட காலத்துக்குள் தமது தலைமைத் துவப்பணியை சரிவரச் செய்தவர். பதில் அதிபர் என்ற காரணத்தால் இவரின் சேவையைத் தொடரத் திணைக்கள நிருவாகம் இடங்கொடுக்கவில்லை.

மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், சமயப் பற்றுக்களில் அக்கறை எடுத்து வளர்த்து வழிகாட்டிநின்ற அதிபர் வரிசையில் இவரின் பங்களிப்புக்களையும் பாராட்டுகிறோம்.

**திரு. செ. நடராசா**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முதுமொழிக்கிணங்கத் தமது சொந்த இடமானகுப்பிளானைப்பிறப்பிடமாகக்கொண்ட திரு. செ. நடராசா இப்பாடசாலையில் 1-3-1973ஆம் ஆண்டு தொடக்கம் 1981ம் ஆண்டு சித்திரை மாதம் வரையும் கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் அதிபராகக் கடமை யாற்றியுள்ளார். இவ்வதிபரின் சேவையில் உதவி ஆசிரியராக ஐந்து வருடங்கள் கடமை யாற்றியுள்ளேன்.

உருவத்தில் உயர்ந்து நிற்பது போல மாணவர்கள், ஆசிரியர்கள், இக்கிராம மக்கள் உள்ளத்திலும் உயர்ந்த இடத்தைப் பெற்றவர். "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கொண்ட இவர், ஆசிரியரின் தரம் அறிந்து அவர்கள் மூலம் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தியவர். கல்வி அறிவு பெற வரும் மாணவர்களுக்குத் தக்க சூழல்களை அமைத்துக் கொடுத்தால் தான் விரும்பிக் கற்பர். என்ற நோக்கில் — ஊர்ப்பெருமக்களின் ஆசியும், ஒத்தாசையும் பெற்றுத்திணைக்கள அனுமதியுடன் மாடிக் கட்டடத்தையும் மனையியல் கூடத்தையும் முன்னின்று கட்டுவித்த பெருமை யுடையவர்.

இந்நிலையில் நூற்றுண்டு விழாக்காணும் இப்பாடசாலையின் கட்டட வளர்ச்சியிலும் பெருமைபெற இவரின் சேவை காரணமாக அமைந்ததென்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

இப்பாடசாலேயில் இருந்து க. பொ. த. சாதாரண பரீட்சைகளில் சித்தி எய்தும் மாணவர்கள் வேறு பாடசாலேகளுக்குச் சென்று உயர்கல்வி பெறுவதிலும் பார்க்க இப்பாடசாலேயிலேயே அவர்கள் பெறவேண் டும்என்ற விருப்பில் கல்வித் திணேக்களத்தின் அனுமதியுடன் இருவருடங்களாக வகுப்பை நடத்தியபொழுதிலும் திரும்ப நிறுத்தவேண் டிய நிலே ஏற்பட்டது. இக்கிராமத்தில் இரு பாடசாலேகளுக்கு உயர்கல்வி வகுப்பு வைக்க அனுமதிக்க முடியாதென்ற காரணத்தைக் காட்டி திணேக்களம் வகுப்பை நடாத்த அனு மதிக்கவில்லே. எனினும் எதிர்காலத்தில் இவ்வெண்ணம் ஈடேறவேண்டுமென்பதை நாம் யாபேரும் எதிர்பார்க்கிறேம்.

திரு. நடராசா எல்லோருடனும் அன் பாகப் பழகும் உள்ளம் படைத்தவர்; மாண வர்கள் மத்தியில் ஒழுக்கம் சமயப்பற்றுக் களே வளர்த்தவர். தினந்தோறும் பாட சாலேயில் நடைபெறும் பிரார்த்தனே வேளே களில் மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை களும், கதைகளும் மாணவ ஆசிரிய உள்ளங் களில் அழியாது பதிந்து நிற்கின்றன.

மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேண வும் மற்றைய கல்லூரி நிலேயுடன் இவர் களும் வேறுபாடின்றித் திருப்திப்பட சீருடையை நடைமுறைக்கு கொண்டுவந் தார்.

விளேயாட்டுப்போட்டிகள், கலேநிகழ்ச்சி கள் மற்றும் பொது வைபவங்களில் மாண வர்களேப் பங்குபற்றச் செய்து மாணவர் களது வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக நின்று சேவைபுரிந்தார், இவரின் சேவை இப்பாடசாலேக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கவில்லே என்று துயருறும் வேளேயில் நூற்றுண்டு கண்ட பாடசாலேயின் உயர் வுக்கு உழைத்த சேவையாளர் என்ற பெரு மையில் திருப்திபெற்று நிற்கிறேம்.

இந்தநிலேயில் இவருடைய காலத்தில் உதவி அதிபராக இருந்த திரு. ஆ. திருநா வுக்கரசு ஆசிரியருடைய நீண்டகால சேவை யில் பாடசாலே வளர்ச்சியில் பங்கு கொண் டவர் என்பதை இங்கு நான் கூறுவதில் தவ றில்லே என உணர்ந்து பெருமையடைகின் றேன்.

## திரு. வ. நடராசா

தம்முடைய ஆசிரிய சேவையில் கூடிய காலம் அதிபர் பதவியை வகித்த திரு. வ. நடராசா அதிபர் – கரவெட்டியைப் பிறப் பிடமாகக் கொண்டவர். இலங்கைக் கல்விச் சேவை 5ம் தரம்கொண்ட ஓர் அதிபர் இப்பாடசாலேயில் நியமனம் பெற்றிருந்தமை பாடசாலேயின் வளர்ச்சிக்கும், பெருமைக் கும் காரணங்களாக அமைந்தன. அத்த கைய தரம் பெற்ற இவ் அதிபர் இப்பாட சாலேக்கு இடமாற்றம் பெற்றுவருமுன்பு திருகோணமலே இந்துக் கல்லூரியில் எட்டு வருடங்கள் அதிபராக விளங்கியவர். அவ ருடன் அக்கல்லூரியில் ஆறு வருடங்களும், இப்பாடசாலேயில் நான்கு வருடங்களும் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய சேவை யில் அவர் சேவைகளேப்பற்றி நன்கு அறி யும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

பின் தங்கிய நிலேயில் இருந்த திருக்கோண மலே இந்துக் கல்லூரியின் கல்விநிலேயை உயர்வுபெறச் செய்தமையைப் போல இங்கும் தமது செயற்பாடுகளே வழிநடத்திச் சென்றவர்.

சமகாலம் வேண்டி நிற்கும் கல்வி அறி வுக்கேற்ப மாணவர்கள் மாற்றம் பெற வேண்டும். அந்த வகையில் ஆசிரியர்கள் வகுப்பறையில் அளிக்கும் கல்வி மாணவனுக்கு வாழ்க்கைக்குப் பயன் உள்ளதாக அமைய வேண்டும் என்று அடிக்கடி எடுத்துக் கூறு வார். பெற்றேர்களால் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு மாணவனும் வாழ்நாட்களில் கூடியபங்கை பாடசாலேயில் கழிக்கிருன். அத்தகைய மாணவனே ஆளுமை பெறச் செய்வதையே ஆசிரியர் தம் குறிக்கோளா கக் கொண்டு உழைக்க வேண்டும் என் பதை உணர்த்திக் கற்பித்தலிற் கையாளும் முறைகளேயும் எடுத்துக் கூறுவார். ஒவ்

வொரு மாணவனினதும் கல்வி உயர்வு கருதி சேவையாற்றியவர் திரு. வ. நடராசா.

முன்மாதிரியாகத் திகழும் கல்லூரிகளைப் போல இப்பாடசாலையும் திகழ வேண்டும் என்ற நோக்கில் மாணவர்களின் ஒழுக்கம், திறமையை வளர்ப்பதில் அக்கறை காட்டிச் செயல்படுத்தினார்.

இன்று இப்பாடசாலை தரம் உயர்ந்து மகாவித்தியாலயமாக விளங்குவதற்கு இவரின் முயற்சியும் காரணமாக அமைந்தது. அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. ச. யோகராசாவின் தனிப்பட்ட ஒத்துழைப்பைப் பெற்றுப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தின் பெருமுயற்சியால் 1982ஆம் ஆண்டு ஆனி மாதம் 22ஆந் திகதி, இப்பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இதற்கோர் விழாவும் பாடசாலை எடுத்தது என்பதை நாம் இங்கு ஞாபகத்தில் கொள்வோமாக. தரம் உயர்த்தலுடன் நூற்றாண்டையும் கொண்டாட வேண்டும் என்று இவர் கருதிய பொழுதிலும் பல்வேறு பிரச்சனைகளின் மத்தியில் விழா எடுக்க முடியவில்லை.

குறைந்த காலத்தில் நிறைவான சேவையை இவர் இப்பாடசாலைக்கு அளிக்க முடியவில்லை, இருந்தும் பரீட்சைப் பெறுபேறுகள் கொண்டு பார்க்குமிடத்து மாணவர்கள் திறமைச் சித்திகளைப் பெற்று உயர் கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேலும் வித்தியாசாலையின் மாணவர்களின் குறைகளையும், வசதியீனங்களையும் போக்குவதற்குத் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பை ஆசிரியர்கள் மூலம் பெற்று நிறைவு செய்தார். இந்த வகையில் குழாய் நீர் வசதி, தளபாட வசதி இன்னும் பல்வேறு வசதிகளையும் மாணவர் நலன்கருதிச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கரவெட்டியில் இருந்து இப்பாடசாலை வந்து கற்பித்த திரு. சின்னையா, திரு. நடராசா (குருக்கள் உபாத்தியார்) ஆகிய ஆசிரியர்களை நினைத்துத் தமக்கும் இப்பாடசாலைக்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறுவார். தனது குறுகிய கால சேவையிலும் நோய் காரணமாக இவரின் சேவை பூரணம் பெறவில்லை. எமது அறுபதாவது வயதில் 2 – 12 – 85ல் இப்பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற அவரின் சேவையையும் நினைவிற் கொண்டு இந்நூற்றுண்டு விழா கொண்டாடும் வேளையில் பாராட்டி நிற்கிறோம்.

கடந்த நூற்றுண்டுகளில் சேவை செய்த அதிபர்களின் பங்களிப்பை நினைவிற் கொண்டு அறிவும், ஆற்றலும், உற்சாகமும் கொண்ட அதிபர் திரு. க. சொக்கலிங்கம் தமது சேவையில் பாடசாலைக்கு சிறப்புக்களைத் தேடித்தருவார். அந்நம்பிக்கையின் ஒளிக்கீற்று இப்பொழுது தெற்றெனத் தெளிவுறுகின்றது.

கடந்த இரு அதிபரின் கீழும் இப்பொழுதும் உதவி அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி ச. முருகையா இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர்களுக்கு ஒத்தாசையாக நின்று உழைத்தவர். எதிர் காலத்திலும் அவரின் சேவையை நாடி நிற்கின்றது கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

# 'சீர் கல்வி'

திரு. தி. நடராஜா ஆசிரியர்

நீல வானத்து நிலவொளி போன்று
ஞாலம் போற்றும் இன்சுவைத் தமிழினை

ஆர்வம் ஓங்கிட அமைவுறக் கற்றிடின்
நேர்மை நீதியெனும் நேரிய பண்பும்

கூரிய அறிவும் பல்கலைத் தெளிவும்
சீரிய வாழ்வினைச் சிறப்புடன் அமைத்திடும்

சிறப்பமை கல்வியின் சீரிய நிலையதால்
உறுப்பினுள் சிறந்ததாம் கண்ணென உரைப்பர்

கற்றோ ரென்பர் கண்ணுடை யோர்கள்
மற்றோ ரனைவரும் மயக்கமுற் றோரே

அருள்பெறு வார்க்கு அருளது காட்டிப்
பொருள்பெறு வார்க்குப் பொருளையும் ஈட்டிக்

கல்விபெற் றோரே யாவையும் பெற்றோர்
நிலையிற் பெரியரே பெரியரென் றிடுவர்

ஆழ்கட லுலகில் கல்வியே கருந்தனம்
வாழ்கசீர்க் கல்வி வாழ்கென வாழ்த்துவோம்

சீரும் சிறப்பும் அன்புடன் ஓங்கிடப்
பாரினில் வாழ்வினை வளமாக் கிடுவோம்.

சுபம்!

# என் மனங்கவர் நல்லாசிரிய மணிகள்

திருமதி ச. கிருஷ்ணானந்தா B. A.

நூற்றாண்டு விழாக்காணும் நூற்கல்விக் கூடமதில்
போற்றுபுகழ் பலவுடைய பண்புமிகும் ஆசான்கள்
ஆற்றியநற் சேவையினு ளவதரித்த ஆசிரியை
சாற்றுகின்றேன் மனங்கவர்ந்த நல்லாசான் மார்சிலரை

ஐந்தாம் வயதினில் அரிவரி படித்திட
ஐங்கரன் துணையென ஏட்டினில் எழுதி
எந்தனுக் குபதேசம் செய்துமே வைத்தவர்
எந்தைக்கும் கல்வியை ஊட்டிய பெருமகன்
பிந்தாமல் பள்ளிக்கு வந்திடும் வழியினில்
பள்ளித் திறப்பினைத் தந்துமே எந்தனைத்
தந்திர மாகவே அழைத்துமே வந்தன்று
அரிவரி வகுப்பிலே அமர்ந்திட வைத்தவர்
கரிதான நெடியஉரு கன்னத்தில் மச்சமுடன்
விரிந்த நுதலில் அகன்றநீற் றுக்குறியும்
பரிமளித்திடப் பள்ளிக்கு வருமிந்த வாத்தியார்
அருஞ்சேவை யாற்றிய அதிபர் பெரியதம்பி.

அரும்பெருங் கல்விக்கு அத்திவார மிட்டவர்
கருமமே கண்ணெனக் கொண்டுமே உழைத்தவர்
மருவியே மகிழ்வுடன் கல்வியைத் தந்தவர்
அருளம்மா அக்காவெனும் ஆசிரிய அன்னையே

நெடிய பெருஉருவும் நெற்றியிலே பொட்டும்
கடிந்துரையா நாவும் கருணைசேர் உள்ளமும்
படிப்பினில் முதன்மை பெறுவோர்க்கு நல்ல
தோடம்பழ இனிப்பும் நிறச்சோக்கும் தந்து
அடியாது அரவணைத்த பிரமச்சாரி ஆசான்தான்
கோடன் சேட்டணியும் முத்துத்தம்பி யாவாரே.

மெலிந்த உருவமும் முறுக்கிய மீசையும்
றலி சைக்கிளில் களைத்துவந் திறங்கிச்
சலிப்பின்றித் தனித்தனி மனனங்கள் கேட்டபின்
நலிவாக நுள்ளி நயம்படக் கல்விதந்த
கல்வியங் காடுறை சண்முக வாத்தியார்.

சொல்லிலே கனிவு செயலிலே துணிவு
கல்விக் காகச்சிறுர் கவனத்தை ஈர்க்கவென
நல்லயுக்தி முறைகளை நயம்படவே கையாண்டு
பல்கலையுந் தந்தவர் பஞ்சலிங்க வாத்தியார்.

பாடசாலை வாழ்விலே ஓர்தினம் நானும்
காலநேரம் தவறவிட்டுப் பரீட்சைக்கு வந்தபோது
என்னகார ணத்தினற் பிந்தினளோ வென்றிரங்கிப்
பரீட்சையில் தோற்றுதற்கு அனுமதியும் தந்திட்ட
பாசமிகு வாத்தியார் பசுபதிப்பிள்ளை யாமவரே.

பொறுமையும் அமைதியும் பொருந்திய வதனமும்
குறும்புபல செய்யுமெம் மைக் கடிந்துரையாத் தன்மையும்
பொறுப்புணர்ந்து சனிஞாயிறில் வகுப்புப்பல வைத்தவர்
மறக்கமுடி யாதஎங்கள் கனகரத்ன வாத்தியார்.

உயரத்தில் அகத்தியர்க்கு உறவுமுறை என்ருலும்
அயராது உழைப்பதிலே இமயமென உயர்ந்தவராம்
அயலூராம் நல்லூரி லிருந்திங்கு வந்துமே
அன்புடனே தம்பிள்ளை போலெம்மை மதித்து
முயற்சியுடன் எமையெல்லாம் முன்னுக்கு வைத்தவர்
முருகேசக் காவென்னும் கதிர்காமுப் பிள்ளை.

புன்னகை பூத்தமுகம் புதுமையான கருத்தால்
இன்னமுத மெனவினிய நற்கல்வி யூட்டி
நன்மாணக் கர்பலரை நானிலத்திற் களித்து
அன்னவரைக் கல்லூரிகளில் சேரவுமே வைத்து
ஆயபல கலைகள்தந்து பட்டம்பெற வைத்தே
இல்வாழ்வைத் துறந்தெங்கள் கல்விக்காக உழைத்தோன்
குன்றுபோல உயர்ந்துநிற்கும் கதிரவேலா சானே.

மெலிந்த சிறுஉருவம் முறுவலித்த சிரிப்பு
கணிதத்தைப் புகுத்திஅதி திறமைபெற்றுத் தந்த
ஒலிக்கின்ற மணிநாத இணுவையூர் சார்ந்த
திருநாவுக் கரசுவெனும் திறமைமிகு செயலோன்.
தான்கற்ற பள்ளியிலே தகுவாசா னயிருந்து
மேன்மையுறு சேவையினல் மதிக்குமுப அதிபரான
நானென்ற அகந்தையற்ற திருநாவுக் கரசரைநாம்
வான்சிந்து மழையெனவே வாயார வாழ்த்துவமே.

அழகான உடல்இளமை மாருத தோற்றம்
மழலைகள் மகிழ்ந்திடக் கல்வியை ஊட்டுவார்
அழகியற் கலைபல ஆர்வமாய்க் கற்றிட
ஆழமாய் விளக்கமும் செயல்மூலம் தருபவர்
சிரித்துச்சிரித்துப் பேசியே சிந்தையில் உறைபவர்
கருத்துடன் சுகாதாரக் கல்வியையும் தந்தவர்
அருகினி லிருந்துநா னின்றுபணி செய்ய
பெருமையும் கொள்பவர் தனேஸ்வரன் ரீச்சரே

உயரத்தால் மட்டுமன்றி உள்ளத்தாலு முயர்ந்தவர்
அயராத சேவையினுல் அகமகிழ் வெய்துவார்
ஆங்கில பாடத்தில் ஆர்வத்தைத் தூண்டிடப்
பென்சிலும் கொப்பியும் திறமைக்குத் தந்தவர்
மாணவர் தரமொடு விளங்கிட வேண்டிக்
கனவிலும் நனவிலும் கடமையாற் றுபவர்
இன்முகத் துடனெமை முன்னுக்கு வைத்தவர்
என்னுடன் கற்பிக்கும் அன்னலட்சுமி அக்காவே.

அடக்கமும் அமைதியும் அறிவும் கொண்டவர்
படவேலை தன்னில் அழகுணர்வை யூட்டியே
புவியியல் பாடத்தைப் பொறுப்புடன் தந்ததால்
புவியியல் படத்திற்குப் பாராட்டும் தந்தவர்
அவரேதான் அவனியில் அன்னநடை பயிலும்
ஆறுமுக ரீச்சரெனும் கமலாம்பிகை அக்காவே.

பார்புகழும் பெரியோரின் பள்ளிவாழ்க்கை - 1


## உண்மைக்காக அழுதவர்

அவர் அப்பொழுது உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்; அங்கு பின்னேரங்களில் உடற்பயிற்சி நடப்பது வழக்கம். ஒருநாள் அவர் உடற் பயிற்சிக்குச் செல்லவில்லை. சுகவீனமான தந்தைக்குப் பணிவிடை செய்து கொண் டிருந்ததாலேயே அன்று போகமுடியவில்லை.

அடுத்தநாள் உடற்பயிற்சி ஆசிரியர் இதுபற்றி விசாரித்தபொழுது அவர், உண்மையைச் சொல்லியும் ஆசிரியர் நம்பவில்லை. அவரைக் கண்டித்தார்.

சிறுவன் கதறியழுதான். காரணம் தாம் கண்டிக்கப்பட்டதற்கல்ல, தாம் உண் மையைச் சொல்லியும் ஆசிரியர் நம்பவில்லையே என்பதற்காகவே அவர் அழுதார்.

அப்படி அழுத சிறுவன் யார்? வாழ்நாள் முழுவதும் சத்தியசோதனை நடத்திய மகாத்மா காந்தி.



# இசை இன்பமே நிலை இன்பம்

செல்வி சி செல்வமலர்
Dip. in Music (Ceylon)
இசைப்பிரிவு.

ஓம் என்னும் பிரணவ மந்திரத்திலிருந்து பிறந்தது நாதம். நாதத்திலிருந்து ஒலியும் ஒலியிலிருந்து ஓசையும் தோன்றியதென்பது இசை வல்லுநர்களின் கருத்து. அந்த ஓசையே வழிவழிவந்த நியதிகள், விதிகளுடன்கூட. அந்த விதிகளுக்கமைய இசை என்பது பரிணமம் பெற்ற சொல்லாக மலர்ந்தது. இசைஇன்பத்தை வழங்கவல்ல சக்தியைத் தன்னுள் கொண்டகாரணத்தால் அறிவு, அனுபவ வளர்ச்சியுற்ற பெரியோர் அதனை இசைச்செல்வம் எனப் போற்றினார்கள்.

இசைக்கு, வடிவமும் வளமும் கொடுத்தவன் இறைவன் என்ற நம்பிக்கையை நூல்கள் வாயிலாகவும், அருணகிரிநாத சுவாமிகளின் "நாத விந்து கலாதீ நமோ நம" என்ற திருப்புகழாலும் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்ற திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகம் மூலமும் அறியமுடிகின்றது. இசை ஆன்மாவை இறைவன் பாலிட்டுச் செல்லும் தன்மையை உடையது என்பதைச் சமயகுரவர் நால்வராலும் பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், பக்தமீரா, அருணகிரியார், காரைக்கால் அம்மையார் ஆகியோர் வரலாறுகள்மூலமும் பிற்காலத்தில் தியாகராஜ சுவாமிகளாலும் அறியமுடிகிறது. ஞானம் இறைவனால் அருளப்பெறுவதென்பதும் அந்த ஞானத்தை இறைவன்பால் செலுத்துமிடத்து முத்திநிலை கைகூடப்பெறுவதென்பதும் ஐதீகம்.

தமிழ் தோன்றிய காலத்திலிருந்தே இசையும் தோன்றியதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியிருந்தபோதிலும் சாஸ்திரிய கட்டுப்பாடுகளுடனான ஆதிகால இசை, தேவாரப் பண்கள் தோன்றிய காலத்திலிருந்துதான் பரிணமித்து உருவம் பெற்றது என்பதை தேவாரப் பண்கள் அமைந்துள்ள ராக, தாள அமைப்புக்கள் புலப்படுத்துகின்றன. நமக்குக் கிடைத்துள்ள ஆதி உருப்படிகள் இவைதாமென்பதற்கு இந்தியாவிலேயே சாஸ்திரிய சங்கீத முறை வளர்ச்சிபெற்றமை தென் இந்தியாதான் எனத் தமிழ் இசைவல்லுநர்கள் மட்டுமின்றி, வட இந்திய மேலைத்தேச இசையாளரும் ஏற்றுக்கொண்டுள்ளமை சான்றாக அமைகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளும், அப்பர் சுவாமிகளும் கி. பி. 7ம் நூற்றாண்டிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி. பி. 9ம் நூற்றாண்டிலும் வாழ்ந்து தேவாரப்பண்களை அருளினார்கள். விசேடமாக நாம் நோக்கவேண்டியது தேவாரப்பண்கள் பாடும்பொழுதே ராக - தாளச் சேர்க்கையுடன் பாடப்பெற்றமை. சான்றாக திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பாடியபொழுது அவருக்கு இறைவனால் பொற்றாளம் கிடைக்கப்பெற்றமை. ஏனைய பாடல்கள் பாட்டு இயற்றப்பட்டபின் இசை அமைத்தவையே. (கால எல்லையில்) பிற்காலத்தில் நம்பியாண்டார் நம்பியின் துணையுடன் ராஜராஜ சோழனால் தேடி இணைக்கப்பட்டு, பண்வகைகளாக வகுத்து ராக - தாள நியமங்கள்ஏற்படுத்தப்பட்டு வந்தமையும் அக்கைங்கரியம் அநபாய சோழமன்னனால் பூர்த்தியாக்கப்பட்டமையும் யாவரும் அறிந்ததே. இப்பண்களை ஆதாரமாகக் கொண்டுதான் பிற்காலத்தில் கர்நாடக இசை விரிவடைந்து வளர்ச்சியுற்றதென்றும் அம்முயற்சியே இன்றைய சங்கீத வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வித்தா

னவை என்றும் பரவலாக ஏற்றுக்கொள் ளப்படுகின்றது.

சங்ககாலத்து அறிஞர்கள் தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று தொகுதி களாக வகுத்து வளர்த்தார்கள். இவற்றில் இசைத்தமிழ் தனித்தியங்கும் தன்மையுட னும், நாடகத்தமிழ் இசையுடன் இணைந்து செயல்படும் தன்மையுடனும் பரிணமிப்பதை நாம் உணரமுடிகிறது. இசைத்தமிழின் பரி ணாமம் தன்மைக்கேற்றவாறு கர்நாடக அல் லது சாஸ்திரீய இசையாகவும் நாட்டுப் பக்திரஸப் பாடல் இசையாகவும், மெல் லிசையாகவும் இன்னும் வடநாட்டு, ஆங்கி லேய பிறநாட்டுக் கலப்பிசையாகவும் பிரி வடைந்துள்ளமையை நாம் காண்கின் றோம். அதேபோன்று நாடகத் தமிழும் இசைத்தமிழோடு இணைந்து பரதம், நாடகம், நாட்டுக்கூத்து, இசைநாடகம் ஆகியவை யுடன் புராண, இதிகாச, சரித்திரப் பின் னணிகளுடன் வளர்ச்சி பெறுவதை நாம் காண முடிகின்றது.

எனவே இசையின்பம் எவரையும், எதையும் தன் சக்தியால் பரவசமூட்டும் தன்மையுடையது. எதையும் தன்பால் ஈர்க் கும் தன்மையுடையது. மக்கள் வாழ்விற்கு மட்டுமின்றி, வளருந்தன்மையுடைய பிரா ணிகளும், பயிரினங்களும் ஊட்டம்பெறக் கூடிய சாதனமாகவும் நாம் கொள்ளலாம். கண்ணனின் புல்லாங்குழலிசையில் ஆவினம் மயங்கியமையும், குறவனின் மகுடி இசையில் சர்ப்ப வர்க்கங்கள் ஆடுவதையும், வண்டு களின் ரீங்கார இசையில் மலர்கள் அலர்வ தையும் இசையின் துணைகொண்டு பயிரினங் களில் அசாதாரண வளர்ச்சியும், ஈதலும் காணப்படுவதையும் நூல் விளக்கங்களாலும் ஆராய்ச்சி அநுபவங்களாலும் நாம் அறி கின்றோம். தற்கால விஞ்ஞானமும் இதை நிரூபிக்கின்றது.

மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துப்படி யும் இசை, கலை, கலாசாரத் தேவைகள் ஒரு நாட்டு வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கிய பங்கை வகிக்கின்றன என்பது அறி வுறுத்தப்படுவதை நாம் படிக்கின்றோம். இதி லிருந்து ஒரு நாட்டின் அமைதிக்கும், ஒவ் வோர் மனிதனின் மனவளர்ச்சிக்கும், மன அமைதிக்கும் இசை ஒரு ஊன்றுகோலாக விளங்குகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. இறைவனில் நாம் இசையைக் காண்கின்றோம். (சிவனின் கையிலுள்ள உடுக்கை, நாராயணன் கையிலுள்ள புல் லாங்குழல், சரஸ்வதி தேவியின் கையிலுள்ள வீணை இதற்குச் சான்றாக அமைந்துள்ளது.) அதேபோல் இசையில் இறைவனைக் காண் கின்றோம். எனவே இசையின்பம் நிலையின்பம் என்பது புலனாகின்றது. ★

**பார்புகழும் பெரியோரின் பள்ளி வாழ்க்கை - 2**

## ஆசிரியரின் ஆங்கில உச்சரிப்பைத் திருத்தினார்

அவர் அப்பொழுது ஆசிரியகலாசாலை மாணவர். அவர் பயின்ற வகுப்புக்கு ஆங்கிலங் கற்பித்தவர் ஓர் ஆங்கிலேயர் ஒருநாள் அந்த ஆங்கிலேயர் இந்திய மாணவர் ஆங்கிலச்சொற்களை உச்சரிப்பதில் விடும் பிழைகளை விரிவுரை அறையில் திருத்திச் சரியான உச்சரிப்பு இதுதான் என்று எடுத்துரைத்தார். ஆங்கிலேயர், தம் கருத்தைக் கூறி முடித்ததும் அந்த மாணவர் எழுந்து "நீங்கள் உங்கள் பேச்சின் போது இன்ன இன்ன சொற்களைத் தவறாக உச்சரித்தீர்கள்" என்று துணிவோடு சொன்னார். ஆங்கிலேயர் நல்லவர். தாம்விட்ட பிழைகளை ஆதாரங்களுடன் நிரூ பிக்குமாறு கேட்டுக்கொண்டார். மாணவர் சிறிதும் தயங்காது ஆங்கில அகராதியை எடுத்து அந்தச் சொற்களின் சரியான உச்சரிப்பை ஆசிரியருக்குக் காட்டினார். ஆசிரியரான ஆங்கிலேயர் தமது பிழையை உணர்ந்துகொண்டார். இவ்வாறு ஆங்கிலேயரின் உச்சரிப்பையே திருத்திய அவர் யார்?

பிற்காலத்தில் ஆங்கிலப் பேச்சிலும் எழுத்திலும் உலகப்புகழ்பெற்ற

**மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார்**

# ஆரம்பக் கல்வியும்
# பெற்றோர் ஆசிரியர் பங்களிப்பும்

திருமதி இ. செல்லத்துரை.

''அரிது அரிது மானுடர் ஆதல் அரிது'' என்ற ஒளவையாரின் வாக்கிற்கிணங்க மனிதப் பிறவியினை எடுத்த எம்மை முழுமனிதனாக்குவது கல்வியே. நாகரிக உலகிலே விஞ்ஞானப் புதுமைகளைப் படைத்து, விண்ணிலே கொடிநாட்டிய மனிதனின் வளர்ச்சி கல்வியினால் ஆனது எனின் மிகையில்லை. அன்று மரநிழலிலும், திண்ணைப் பள்ளிகளிலும் கற்பிக்கப்பட்ட கல்விப்போதனை இன்று பாரிய கட்டடங்களிலே, பல நவீன வசதிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. கல்வியறிவு இல்லாதவனை நாடும், ஏடும் போற்றாது. அவன் சமுதாயத்திலும், தன் சொந்த வாழ்விலும் நல்லபடியாக வாழவும் முடியாது. இத்தகைய சிறப்புமிகு கல்வியை எமது நோக்கில் கற்கும் முறைகளை நோக்குவோம்.

எமது நாட்டில் 1945இல் இலவசக் கல்வி முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் எவரும் திறமைக்கேற்ற கல்வியைக் கற்கமுடிந்தது. இத்துடன் காலத்துக்குக் காலம் கல்விமுறையிலும் மாற்றங்கள் நடந்துவருகின்றன. அண்மைக்கால மாற்றங்களில் ஆரம்பவகுப்பில் ஏற்பட்ட மாற்றங்களையும் குறிப்பிடலாம். உதாரணமாக அன்று மண்ணிலும் சிலேற்றிலும் எழுதினோம். இன்று கொப்பியில் எழுதச்செய்கின்றோம். ஆரம்ப வகுப்புக்களில் ''ஒருங்கிணைந்த முறையில்'' கல்வி (சுற்றாடல், வாசிப்பு, கணிதம், ஆக்கம் என்பன) கற்பிக்கவேண்டும். மாணவர்களைக் குழுக்களாக வைத்து, செயல்மூலம் கற்பிக்கப்படுகின்றது. செயல்மூலம் உணர்த்தலுக்கு உபகரணங்கள் தேவை. இவற்றை மாணவர்கள் வீட்டிலிருந்து கொண்டுவரவேண்டும். இவை நாம் வெளியே வீசும் கழிவுப் பொருட்களாகவே (வெற்றுப் பெட்டிகள், வெட்டுத்துணிகள், நிறமணிகள், விதைகள், மூடிகள், இலைகள், பூக்கள் போன்றன) பெரும்பாலும் இருக்கும். இவற்றைக் கொண்டுவரும்படி முன்கூட்டியே நாம் பிள்ளைகளிடம் (பாடசாலை முடிந்து வீடு செல்கையில்) சொல்லிவிடுவோம். மறுநாள் சிலர் கொண்டுவருவார்கள். கொண்டுவராதவர்களில் சிலர் அம்மா தரவில்லை, ''இதெல்லாம் தேவையில்லையாம்'' என்று சொன்னார் என்பார்கள். இன்னும் சிலர் ''ரீச்சருக்கு வேறுவேலையில்லையோ''? என அம்மா ஏசுகிறார் என்பார்கள். இந்த நிலையில் எம்மால் என்னசெய்ய முடியும்? பொருட்களைக் கொண்டுவந்தோர் செயலில் ஈடுபட, ஏனையோர் வீணே இருக்க முடியுமா? இருந்து துயரப்படுவோர் (ஏனையோர் செய்பவற்றைப் பார்த்து) ஒருபுறம், மற்றவர் செய்பவற்றைக் குழப்புவோர் மறுபுறமாகவும் இருப்பர். அம்மாவின் அசட்டையும் அறியாமையும், பிள்ளையின் மனநிலையையும் கல்வியையும் பாதிப்படையச் செய்கின்றது. ஆசிரியர் தம்மாலான வழிகளில் பிள்ளையை வழிப்படுத்தவேண்டியுள்ளது. ஆரம்பகல்விப் போதனைபற்றி ஆசிரியர்களுக்குக் காலத்திற்குக் காலம் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆனால் பெற்றோர் பலர் தாம் கற்ற காலத்தையே கருத்திற்கொண்டு தம் செல்வங்களின் கல்விக்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்.

அன்புப் பெற்றோரே! உங்கள் அரவணைப்பில் வளர்ந்த பிள்ளைகளை எம்மிடம் ஒப்படைக்கின்றீர்கள். எங்கள் அன்புப் பண்ணையில் விட்டுள்ள உங்கள் பயிர்களைச் செழிப்பாக வளர்த்துவிடவேண்டிய பொறுப்பில் நீங்களும் பங்குகொள்ளவேண்டும். அறியா உறுதுணையாக இருக்கவேண்டிய பொறுப்புத் தற்காலக் கல்விமுறைக்கு அவசியம் தேவைப்படுகின்றது. ஏன்...? அன்று சிலேற்றில் எழுதினோம். இன்று கொப்பியில் எழுது

கிறோம். அன்று மனனஞ்செய்து கற்றோம். இன்று குழுவாக இருந்து செயல்மூலம் கற்பிக்கிறோம். கழிவுப்பொருள் உபயோகம் பற்றி மீண்டும் கூறவேண்டியுள்ளது. வெற்றுப்பெட்டிகள் (தீப்பெட்டி, பால்மாப் பெட்டி, பற்பசைப்பெட்டி) நிறக்கடதாசிகள், வேறு கழிக்கப்பட்ட பொருள்களால் அழகிய வீடு. கட்டடங்கள், கோபுரங்கள் பாலங்கள் வாகனங்கள் போன்றவற்றை ஆக்கம் செய்கின்றனர். இதனால் அவர்களது கற்பனையும், சிந்தனைத் திறனும் வெளிப்படுகின்றன இப்பிள்ளைகளின் முழுமையான ஆக்கச் செயற்பாட்டைக் கல்விப் பொருட்காட்சியின்போது கண்டுகளித்திருப்பீர்கள். எனவே இக்கற்றல்முறைக்கேற்ற ஊக்குவிப்புகளை அளிப்பதில் பெற்றோரும் உதவவேண்டும்.

படிப்புச் சீரானமுறையில் தொடரப்படவேண்டுமானால் ஒழுங்கான வரவும் அவசியம் தேவைப்படுகின்றது. கற்றல் நிகழும் தவணைகளில் மனம்போனபடி வீட்டில் நின்றுவிட்டுப் பரீட்சைக்காலங்களில் மட்டும் ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவார்கள். பாடசாலைப் புள்ளிநிலை குறைந்ததும், ஆசிரியரின் கற்பித்தல் பிழை என்பாரும் உண்டு. பிள்ளையின் உள வளர்ச்சியும் கல்வியோடு இணைந்ததே. சில தாக்கங்களால் பிள்ளையின் நிலையில் மாற்றங்கள் நிகழலாம். இவற்றைப் பெற்றோர் ஆசிரியருக்கு அறிவிப்பாராயின் அவர்களை அதற்கேற்ப வழிநடத்த முடியும். தற்போது கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி எங்கும் ஒரேவிதமான கல்விப் போதனைதான் நடைபெறுகின்றது. பெரிய கல்லூரிகளிலிருந்து பிள்ளையின் கல்விசம்பந்தமாக வரும் அழைப்பை ஏற்று அங்கு தவறுது செல்லும் பெற்றோர் தம் அயலிலுள்ள பாடசாலைகளில் படிக்கும் தம் பிள்ளைகளின் தேவைகள்பற்றித் தொடர்புகொள்ள மனங்கொள்வதில்லை. பாடசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டங்களிலாவது கலந்துகொண்டு பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கான பங்களிப்புகளை யாவது செய்யலாந்தானே. ஆரம்பக்கல்விதான் எதிர்கால உயர்கல்விக்கு அத்திபாரமாக அமைகின்றது. இந்த அத்திபாரத்தை ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து நல்லமுறையில் இட்டால், பிள்ளைகளின் எதிர்காலம் நன்கு பிரகாசிக்கும் என்பது குன்றின்மேல் விளக்கு.

☆

**பார்புகழும் பெரியோரின் பள்ளி வாழ்க்கை - 4**

## 'காளமேகம் கட்டளைக்குப் பணிந்து மழை பொழியாது'

அவர் ஒரு பிறவிக் கவிஞர், சிறுவயதிலேயே பாட்டியற்றும் திறமை பெற்றிருந்தார்; பள்ளியிலே அவருக்குத் தமிழ்கற்பித்த ஆசிரியருக்கு அவரின் திறமையில் நம்பிக்கை இல்லை. ஒருநாள் வகுப்பறையிலே அந்த ஆசிரியர் அவரைப் பார்த்து ''நீர் கவி பாடுவதிலே காளமேகம் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். இப்பொழுது உம் கவிமழையைப் பொழியலாமே?'' என்று ஏளனமாகச் சொன்னார். அதற்கு அவர், காளமேகம் (கருக்கொண்ட மேகம்) கட்டளைக்குப் பணிந்து மழை பொழியாது. அதுபோல நாமும் உங்கள் கட்டளையை ஏற்றுக் கவிமழை பொழிய மாட்டோம்'' என்றார்.

இவ்வாறு சொன்ன துணிச்சல்காரர் யார்?

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.**

# ★ மாணவர் கவிதைகள் ★

## பூக்கள்

வட்ட வட்டப் பூக்கள்
வடிவான பூக்கள்
அம்மா தந்த பூக்கள்
அழகான பூக்கள்
மணம் வீசும் பூக்கள்
மாலை கட்டும் பூக்கள்
கண்டியில் இருந்து அப்பா
வாங்கி வந்த பூக்கள்
கவர்ச்சியான பூக்கள்
கண்ணுக்கினிய பூக்கள்

பா. சிவகுமார்
ஆண்டு I A

★

## பழங்கள்

வண்ண வண்ணப் பழங்களாம்
வடிவான பழங்களாம்
எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இனிய நல்ல மரங்களில்
காய்த்துக் குலுங்கும் கனிகளாம்
கடித்துச் சுவைக்கும் கனிகளாம்
சிறுவர் நாங்கள் களிப்புடன்
சேர்ந்து கனிகள் பறிப்போமே
இனிமையான பழங்களை
உண்டு நாங்கள் மகிழ்வோமே.

பே. ரிஷிகேசன்
ஆண்டு I B

★

## கிளி

கிளி எனது செல்லப் பிராணி
நான் கிளியைக் கூட்டில் வளர்க்கிறேன்
அதற்குப் பாலும் பழமும் ஊட்டுவேன்
எனது கிளியைப் 'பெற்றி' என அழைப்பேன்
அது என்னுடன் கதைக்கும்
என்னைக் காணுதுவிட்டால் கவலையுடன் இருக்கும்
என்னைக் கண்டதும் சுபோ, சுபோ என்று கூப்பிடும்
நான் மிக மகிழ்வுடன் எனது கிளியை அணைப்பேன்.

இ. சுபோ
ஆண்டு II A

★

## எங்கள் பசு

எங்கள் வீட்டில் வெள்ளைப் பசு நிற்கிறது
அதன் பெயர் லட்சுமி
லட்சுமி ஒரு கன்றை ஈன்றுள்ளாள்
அது மிகவும் அழகானது
கன்று துள்ளி ஓடும்
கன்றைக் காணவிட்டால் லட்சுமி கதறி அழுவாள்
கன்று கிட்ட வந்ததும் முத்தமிடுவாள்
அதனை நாவால் நக்குவாள்
லட்சுமி எங்களுக்குப் பால் தருவாள்
அவளே எங்கள் செல்லப் பிராணி.

பொ. வினிதா
ஆண்டு II A

★

## என் அருமைப் பூனை

அழகான பூனை
வெள்ளை நிறம் கொண்டது
என்னைச் சுற்றித் திரியும்
பந்தை வாயில் கவ்வும்
விட்டு விட்டுப் பிடிக்கும்
எலியைப் பிடித்துத் தின்னும்
புலியைப் போலப் பாயும்.

கிருஷ்ண கோபி
ஆண்டு II B

## புரியவில்லை எனக்கு!

கப்பல் ஒன்று செய்து கடலில் விட்டேன்
அழகாய் மிதந்தது தண்ணீரில்
கல்லொன்று போட்டேன் அக்கடலில்
அதுவோ தண்ணீரின் கீழ் போய்விட்டது
ஏன்?

புரியவில்லை எனக்கு?
பட்டம் ஒன்று செய்து பறக்க விட்டேன்
பறந்தது அழகாய், நூல் அறுந்தது
சுழன்று சுழன்று ஓடியது
கல்லொன்றுஎறிந்தேன், பட்டம் விழுமென்று
கல்தான் கீழே விழுந்தது. ஏன்?
புரியவில்லை எனக்கு !

சி. சிவஹஜன்
ஆண்டு II B

★

## பூனை

மியா மியா பூனையே
மீசைக்காரப் பூனையே
தயா உன்னை அடித்தால்
தயக்க மின்றிச் சொல்லுவாய்
பயமும் வேண்டாம் உனக்கு
பாசமாக வளர்ப்பேன்
துயரம் கொள்ள வேண்டாம்
தம்பி போல வளர்ப்பேன்.

ப. ராஜீ
ஆண்டு 3 B

★

## பட்டம்

பட்டம் நல்ல பட்டமாம்
பறந்து செல்லும் பட்டமாம்
இட்டமாக வானில் ஏறி
இரைந்து கூவும் பட்டமாம்
பச்சை மஞ்சள் சிவப்பு நீலம்
பளபளக்கும் நிறங்களில்
முச்சை கட்டி உச்சி மீதில்
உயர்ந்து செல்லும் பட்டமாம்.

ம. தீபா
3ம் ஆண்டு

## எனது சட்டை

சட்டை சட்டை சட்டை
மாமா தந்த சட்டை
வண்ண வண்ணச் சட்டை
வடிவான சட்டை (சட்டை...)
பட்டுச் சட்டை ஒன்று
பருத்திச் சட்டை ஒன்று
இரண்டு சட்டை தந்தார்
தீபாவளி யன்று (சட்டை...)
ஒன்றை நானும் போட்டேன்
மாமி கண்டு மகிழ்ந்தார்
பட்டுச் சட்டை போடவே
பார்த்து வியந்தனர் நண்பர்கள்.
(சட்டை...)

ந. பாலமோகன்
ஆண்டு 4 A

★

## சின்னச் சின்ன எறும்பு

சின்னச் சின்ன எறும்பு கூட
வரிசை கட்டிப் போகுது!
நின்று பார்க்க எனக்குக் கூட
ஆசையாக இருக்குது!
சிப்பாய் படை போடும் காட்சி
மனதைக் கொள்ளை கொள்ளுது!
தப்பாய் யாரும் நடந்திடாமல்
வரிசை யாகப் போகுது.

ஆ. றஜனி
ஆண்டு 4 B

★

## திருமணமாம் திருமணம்

திருமணமாம் திருமணம்
அருமை அக்கா திருமணம்
சிங்கப் பூரில் சின்னண்ணு
தங்கை அன்பில் வந்தாரே.
வண்ண வண்ணச் சட்டைகள்
வடிவான தொப்பிகள்
எண்ணரிய மாலைகள்

எனக்கும் கொண்டு வந்தாரே.
பள பளக்கும் தலைநகை
அழகு வண்ணப் பூச்சுக்கள்
நாக ரிகக் கொண்டைகள்
அக்காவுக்கு வந்தன.
சரிகைப் பட்டுச் சேலைகள்
அருமை வூலி நைலோனும்
பெருமையாக அணியவே
அம்மாவுக்கு கிடைத்தன.
யப்பான் குடை பாருமே
அப்பா வுக்குக் கிடைத்தது
தொப்பியுமோ நல்லது
இப்ப வாங்க முடியுமோ?

ச. சபேசினி
ஆண்டு 5A

# எங்கள் சங்கீத வகுப்பு

முதல் பத்மா மோகன ராகம்
அடுத்து விமலா கல்யாணி
தொடுத்து சித்திரா ஹம்சத்வனி
பின்வருவது மஞ்சுளா கரகரப்பிரியா
நீண்ட கூந்தலுடைய கீதா சாயாவதி
இருபின்னலைக் கொண்ட ரூபவதனி கலாவதி
உயரமான குமுதினி தர்மாவதி
குட்டையான ரூபினி பூபதி
கலையார்வம் கொண்ட ரேணுகா தேனுகா
உடற்பயிற்சி யுடைய வதனு தோடி
வகுப்பில் மிளிர்கின்ற சுந்தரி வசந்தா
ஒழுக்கத்தில் சிறந்த லதா காபபோதி
இவர்களைவரையும் ஒன்ருக இணைப்பது
சிந்து பைரவி.

இ. லதாரூபி
10ம் ஆண்டு

பார்புகழும் பெரியோரின் பள்ளி வாழ்க்கை – 3

## ஆசிரியரால் செய்யமுடியாத கணக்கைச் செய்தான்

அவன் மகாவிவேகி; முயற்சியில் சலிக்காதவன்; முடியாது என்ற வார்த்தையே அவன் அகராதியில் இல்லை, பள்ளிப் பருவத்தில் வகுப்பறையிலே அவனுக்கும் சகமாணவருக்கும் கணித ஆசிரியர் கணக்கொன்றைக் கொடுத்தார். அது கடினமான கணக்கு. மாணவர்களால் செய்ய முடியவில்லை ஆசிரியரும் முயன்று பார்த்தார். அவராலும் முடியவில்லை, ஆனல் அவனே மனம் சலிக்கவில்லை. ஒருநாள் முழுவதும் தனது அறையைப் பூட்டிக்கொண்டிருந்து அன்ன ஆகாரமோ, நித்திரையோ இன்றி அந்தக் கணக்கைச் சரியாகச் செய்து முடித்தான். அவனது சாதனையை ஆசிரியரும் மாணவரும் மெச்சினர்!

அவன் யார்?

பதினெட்டாம் நூற்றுண்டிலும் பத்தொன்பதாம் நூற்றுண்டுத் தொடக்கத்திலும் ஐரோப்பிய நாடுகளை ஒரு கலக்குக்கலக்கிய

மாவீரன் நெப்போலியன் பொனபாட்.

# கட்டுரைகள்

## பூக்கள்

பூக்கள் அழகுள்ளவை, வாசனை பொருந்தியவை. இந்தப் பூமியில் உள்ள பூஞ்செடிகள் எல்லாம் பூத்திருக்கும்போது பூமிதேவி சிரிப்பதுபோல இருக்கும். மலர்கள் பூமியை அழகு செய்கின்றன. அதுமாத்திரமன்று, இனிய வாசனை உடையவை. கண்ணைக் கவரும் பலநிறங்கள் கொண்டவை. மதுரமான தேனைத் தன்னுள்ளே வைத்திருப்பவை, மங்களகரமானவை.

கி. ஜெனன்
ஆண்டு 3 B

*

## நாங்கள் பாக்கியசாலிகள்

எமது பாடசாலை திண்ணைப்பள்ளிக்கூடமாக இருந்தது அன்று. மாடிப்பள்ளிக்கூடமாக இருக்கிறது இன்று. ''ஐயர்ப் பள்ளி'' தான் இன்று, "இந்துமகா வித்தியாலயம்'' ஆகிவிட்டது. எத்தனை எத்தனை பெயர்கள் சூட்டினாலும், ''ஐயர்ப் பள்ளிக்கூடம்'' ''சைவப் பள்ளிக்கூடம்'' என்ற பெயர்கள் கல்லில் எழுதிய எழுத்துக்களே.

நாம் இங்கு சகல கலைகளையும் கற்றுக்கொண்டிருக்கிறோம். கணக்கற்ற ஆசிரியர்களையும், பண்டிதர்களையும், மேதைகளையும் ஆக்கித்தந்தது எம் கல்விக்கூடம். எனது பெற்றோர், பாட்டன், பாட்டி படித்த பாடசாலையும் இதுவே.

அன்று எங்கள் பள்ளிக்கூடம் ஓலைக் கொட்டிலாக இருந்ததும் ''சைவம் மணத்ததும்'' என்று எம் முன்னோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வெள்ளி தோறும் சாணத்தால் மெழுகியபின்னர்தான் பிரார்த்தனையும், பாடங்களும் நடக்குமாம். கர்ப்பூர வாசனையும், சாம்பிராணி வாசனையும் மூக்கைத் துளைக்குமாம்.

ஆனால் இன்றோ, அதைவிட ஒருபடி உயர்ந்து நிற்கிறோம். அம்பலவாண சுவாமிகள் வழிபட்ட நால்வர் விக்கிரகங்களை வணங்கக் கொடுத்து வைத்தவர்கள் நாங்கள். நாங்கள் பாக்கியசாலிகள், எம் இளம் சந்ததியினர் பாக்கியசாலிகள்.

''வாழ்க சைவம். வளர்க தமிழ்''

இ. தயாநந்தினி
ஆண்டு 4 A

*

## நான் பெரியவனாக வளர்ந்துவிட்டேன்

எனது கதை பெரியது. நான் ஒரு தெருக்கானிற் பிறந்தேன். என் அழகைக் கண்ட ஒருவர் என்னைத் தன் வீட்டிற்குக் கொண்டு சென்றார். அங்கு எனக்கு இராஜ மரியாதை நடந்தது. என்னைக் குளிக்க வார்த்து விரும்பிய உணவுகளை எல்லாம் தந்து அன்பாக வளர்த்துவந்தார்கள். எனக்குப் 'பப்பி' என்று பெயரையும் சூட்டினார்கள். எனது சின்ன எசமான் தான்போகும் இடமெல்லாம் என்னையும் கூட்டிச் செல்வார். மாலைவேளையில் பந்து உருட்டி விளையாடுவேன். என்னைப் பார்த்து வீட்டிலுள்ளோர் மகிழ்வார்கள். நான் இப்போது பெரியவனாக வளர்ந்துவிட்டேன். எனது வீட்டவருக்கு உற்ற நண்பனாகவும், காவலனாகவும் கடமைபுரிகின்றேன். நான் யார் என்று தெரிந்துகொண்டீர்கள் தானே?

ஆ. ஜெயவதனி
ஆண்டு 4 B

*

## தன்வினை தன்னைச் சுடும்

பாஸ்கரன் ஒரு நல்ல பையன். அவன் சுறுசுறுப்பானவன். ஒருநாள் அவனது வகுப்பாசிரியர் வரவில்லை. அதனால் எல்லா மாணவர்களும் வகுப்பறையில் விளையாடத் தொடங்கிவிட்டார்கள். பாஸ்கரன் அமைதியாக இருந்தான். அடுத்தநாள்

ஆசிரியர் வகுப்புக்கு வந்தார். நேற்றுக் குழப்படி செய்தவர்கள் எழும்பலாம் என்றூர் ஆசிரியர். குழப்படி செய்தவர்கள் எழும்புவார்களா? ஒரு மாணவன்கூட எழும்பவில்லை.

ரவி எழுந்து "சேர், நேற்றைக்கு முரளியும் பாஸ்கரனும் சண்டை பிடித்தார்கள்" என்றான். ரவியின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொண்ட ஆசிரியர் முரளிக்கும் பாஸ்கரனுக்கும் ஒவ்வொரு அடி கொடுத்தார். பாடசாலை முடிந்ததும் ஆசிரியர் ரவியைக் கவனித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது ரவி தன் சிநேகிதனுக்கு "எப்படி இன்றைக்கு வகுப்பில் பாஸ்கரனுக்கும் முரளிக்கும் அடி வாங்கிக் கொடுத்தேன்" என்றான்.

அடுத்தநாள் பாஸ்கரன் பாடசாலைக்கு வரவில்லை. பாஸ்கரன் பாடசாலைக்கு வராத அன்று ரவி ஆசிரியர் வரமுதல் ஓடி விளையாடும்போது ஒரு வாங்கை உடைத்துவிட்டான். அன்று ஆசிரியர் வகுப்புக்கு வரும்போது உடைந்த வாங்கைக் கண்டார். ரவிதான் இந்த வாங்கை உடைத்தான் எனத் தெரிந்து கொண்டார். என்றாலும் ரவியைக் கேட்கவில்லை. மறுநாள் பாஸ்கரன் பாடசாலைக்கு வந்தான். எல்லோருக்கும் ஒரு நிபந்தனை போட்டார். "யாராவது பொய் சொன்னால் கடுமையான தண்டனை விதிப்பேன்" என்றார். பின்பு "இந்த வாங்கை உடைத்தது யார்?" என்று கேட்டார் ஆசிரியர். இந்த முறையும் பாஸ்கரனுக்கு அடி வாங்கிக் கொடுக்கலாம் என்று திட்டமிட்ட ரவி "பாஸ்கரன்தான் உடைத்தான்" என்றான். "எப்போது" என்றார் ஆசிரியர். "நேற்று" என்றான் ரவி.

அப்போது ஆசிரியர் "நேற்று பாஸ்கரன் பாடசாலைக்கு வரவில்லை, நீ பொய் சொல்லிவிட்டாய். அத்தோடு நேற்றைக்கு முந்திய நாள் நீ பாஸ்கரனுக்கும் முரளிக்கும் தேவையில்லாமல் அடிவாங்கிக் கொடுத்தாய்" என்றார் ஆசிரியர். இவற்றைக் கேட்ட ரவி தேவையில்லாமல் அடிவாங்கிக் கொடுத்தேனே என்று எண்ணினான். பாபம் ரவி! ஆசிரியர் ரவியை வகுப்பைவிட்டே கலைத்துவிட்டார்.

அ. அர்ச்சுதன்
ஆண்டு 5 A

*

# மைனாவின் சுயசரிதை

"தம்பி! உன்னைப் பார்த்தால் நீயொரு நல்ல பையன்போல் தோன்றுகிறாய்; இன்னும் சிறிது நேரத்தில் நான் இறந்துவிடப் போகிறேன் அதற்குள் நீயாவது எனது சுயசரிதையைக் கேட்பாயாக" என்றது ஒரு கூட்டினுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு மைனா. ஆகவே நான் அதன் அருகே சென்றேன். மைனாவும் கதைகூற ஆரம்பித்தது.

என் கண்களெல்லாம் பார்வையிழந்துவிட்டன; உடல் எலும்பும் தோலுமாகத் தோன்றுகிறது. என்னிடமிருந்த அழகு, வீரம், இளமை எல்லாம் மறைந்துவிட்டன. முதிர்ச்சியினாற்போலும் எவரும் கவனிப்பாரின்றி இக்கூட்டில் அடைபட்டிருக்கின்றேன்.

இந்நிலையில் இருந்துகொண்டு இளமைப் பருவத்தை நினைக்க எவ்வளவு இன்பமாக இருக்கிறது. நான் முன்பு உல்லாசமாகப் பறந்து திரிந்து பூச்சி, புழு, காய், கனியுண்டு பசிதீர்ப்பேன். நண்பர்களுடன் கூடிக்குலாவி விளையாடுவேன். அன்று நான் செய்த குறும்புகளை நினைக்க நானே ஆனந்தக்கடலில் ஆழ்கிறேன். அந்தமாதிரியான இளமை இனியும் திரும்ப வருமா?

ஒருநாள் நான் ஒரு சோலையிலே மாங்கனி திருடி உண்டுகொண்டிருந்தேன். அப்போது ஒரு அரக்கன் என்னைக் கண்டுவிட்டான். என் அழகில் மயங்கிய அவன் என்னைத் தான் வளர்க்க எண்ணி என்மீது ஒரு கல்லை வீசினான். தப்பிச்செல்ல முயன்றேன். முடியவில்லை. கல்லெறி என்மீது பட்டது. நிலையிழந்து நிலத்தில் விழுந்தேன். வலி தாங்க முடியாதுகத்தினேன். அவனோ என்னை விடவேயில்லை? அன்றுமுதல் என்வீடு இச்சிறு கூடுதான். பரந்தவெளியெல்லாம் பறந்து திரிந்த என்னை இக்கூட்டில் அடைத்தான்.

"நான் இங்கு வந்த காலத்தில் எனக்கு நல்ல வரவேற்பு. ஒவ்வொரு நாளும் அருந்துவதற்கு நல்ல பால், உண்ணுதற்குப் பழம், தினம் தவருத மஞ்சட்குளிப்பு யாவும் நேரத்துக்கு நடைபெறும். சிறிது நாட்களின் பின் ஒவ்வொன்றும் குறைந்துகொண்டேபோயின. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்கள். அதுபோல எனக்கு இப்போது மகிழ்ச்சியோ இல்லை. எத்தனையோ நாட்கள் பட்டினிதான். சுதந்திரத்தைப்போல் இன்பமானது வேறுண்டா? என்று கூறிவிட்டு அம் மைனு இறந்துவிட்டது. அம்மைனுவுக்குள்ள சுதந்திர நினைவு நமக்கில்லையே என்று வெட்கப்பட்டேன்.

ஆ. ரஜீவன்
ஆண்டு 6 B

★

# நெல்லின் சுயசரிதை

ஒருநாள் எனது தாயார் நெல்லைக் காய வைத்தார். நான் அதன் பக்கத்தில் இருந்தேன். வெயில் வெப்பம் தாங்கமுடியாமல் கவலைகொண்ட நெல் தன் கதையை எனக்குக் கூறத் தொடங்கியது.

"உலகில் நாம் இல்லையேல் மக்களும் இல்லை. எமக்கு உள்ள மதிப்பு யாருக்கும் இருக்கமுடியாது. ஆனல் நாம் பட்ட துன்பமோ சொல்லிமுடியாது. முதலில் எம்மையெல்லாம் சேற்று நிலத்திலே சிறிதும் இரக்கமின்றி வீசி எறிந்தார்கள். நாம் சேற்றிலே புதையுண்டு மூச்சுவிட முடியாது அவஸ்தைப்பட்டோம். சில நாட்களில் முளைத்துப் பயிர்களானேம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பச்சைப் பசேலென்று கம்பீரத் தோற்றத்துடன் காட்சியளித்தோம். கதிர் ஈனும் பருவத்தையும் அடைந்துவிட்டோம்.

திடீரென ஒருநாள் பெருமழை பொழிந்தது. எம் கழுத்துவரை நீர் உயர்ந்துவிட்டது. நாம் எல்லோரும் செத்து மடிய வேண்டியதுதான் என ஏங்கினேம். இறைவனருளால் மழையும் நின்றது. நாமும் உயிர் தப்பினேம். கதிர்களை ஈன்று நிம்மதியடைந்தோம். எமது பச்சை நிறத்தை இழந்து பொன்னிறத்தை அடைந்தோம். அப்போது நாம் கவனிப்பாரில்லாமல் நிலத்தில் சாய்ந்தோம். வெயிலில் வாடி வதங்கினேம். சிலநாட்களின்பின் கத்தியும் கையுமாகப் பலர்வந்து சேர்ந்தனர். சிறிதும் இரக்கமின்றி எம்மை வெட்டி வெட்டி நிலத்தில் குவித்தனர்.

அந்தோ பரிதாபம்! குவியலாக இருந்த எம்மேல் மாடுகளை மிதிக்கவிட்டனர். அப்போது அத்துன்பத்தைத் தாங்கமுடியாது கண்ணீர்விட்டு அழுதோம். சிறிது நேரத்தில் நெல்மணிகளாகப் பிரிந்தோம். அதன் பின் எமக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டது. எம்மையெல்லாம் சாக்குகளில் போட்டு மூடைகளாக்கினர். வாகனங்களில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டுசென்றனர். எமக்கென ஒதுக்கப்பட்ட அறையில் அடுக்கிவைத்தனர். மதிப்புடன் பாதுகாத்தனர்.

வீடுகளில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கு எம்மையே முதலிடத்தில் வைக்கின்றனர். தானிய வகைகளிலும் முதலிடம் எமக்குத்தான். குடும்பச் சிறப்பும் ஊரின் உயர்வும், அரசனின் உயர்வும் எம் கையிலேதான் உண்டு. இதை ஒளவைப்பாட்டியும்.

"நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்"

என்று அழகாகக் கூறிவைத்துள்ளார்.'' இவ்வாறு நெல் தன் கதையைக் கூறிமுடித்தது.

ஆ. சுசீர்தன்
ஆண்டு 6 B

★

# மாணவர் கடமை

மாணவர்கள் மாண்புடையவர்கள். மாணவர் தாய்தந்தைக்கும் குருவிற்கும் கீழ்ப்படிந்து நடப்பவர்களாகவும், நல்லொழுக்கம், கட்டுப்பாடு, பொறுமை, அன்பு, பண்பு, பணிவு உடையவர்களாகவும் திகழ வேண்டும். மாணவ சமுதாயமே நாளைய

சமுதாயத்தைக் கட்டியாளப் போகிறது. திறமை, நல்ல மனப்பாங்கு, நல்ல சமுதாய இணக்கம் போன்ற குணதிசயங்களை உடைய வர்களாகவும் இலட்சிய நோக்கு உடையவர் களாகவும் மாணவர் இருத்தல் வேண்டும்.

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கிணங்கக் கற்கவேண்டியவற்றைக் கசடறக் கற்றுத்தெளிவு பெற்று நன்மாணக் கர்களாக நானிலம் போற்ற வாழவேண்டும். பாடசாலை வாழ்க்கை கவலையே இல்லாத வாழ்க்கை. துள்ளித்திரியும் பருவம், படிக்க வேண்டும் என்ற ஆவல், புதியவற்றைப் புரிந்து உணரவேண்டும் என்ற விருப்பம், தலைமை தாங்கும் பண்பு, விட்டுக் கொடுக் கும் மனப்பாங்கு ஆகிய குணங்கள் மாண வர்களிடத்தில் அதிகம் காணப்படுகின்றன.

மாணவர்கள் பெற்றோரைத் தெய்வங் களாக மதிக்கவேண்டும். அவர்கள் இடும் கட்டளைகளைத் தலைமேற் கொண்டு உடனுக் குடன் நிறைவேற்ற வேண்டும். மாணவர் கள் பெற்றோரின் முதுமைக் காலத்தில் அவர் களுக்கு வேண்டுவனவற்றைச் செய்து பக் கத்தில் இருந்து கவனிக்க வேண்டும். ஆசிரி யரை நன்கு மதித்து நடக்கவேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.

பொறாமை, வஞ்சகம், சூது, களவு, பொய் போன்ற குணங்கள் இல்லாதவர்க ளாக தூய்மையான மனமும் தெளிவான சிந்தனையும் உடையவர்களாக மாணவர் இருத்தல் வேண்டும். மாணவர்கள் பாடசா லைக் கட்டுப்பாட்டுக்கு அமைய ஒழுகவேண் டும். எந்த ஒரு விடயத்தையும் பின் போடாது உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும். ஒழுக்கமுடையவர்களாக இருப் பவர்களே நன்மாணக்கர் ஆவர்.

ம. கலைச்செல்வி
ஆண்டு 6B

★

## கர்வம் அடங்கியது

காந்தனின் வீட்டில் வாகனங்கள் நிறுத் தும் இடத்தில் சைக்கிள் ஒன்று நின்றது. அதன் அருகே ஸ்கூட்டர் ஒன்றும் கம்பீர மாக நின்றது. அது சைக்கிளைப் பார்த்துப் பலத்துச் சிரித்தது. இதனைக் கண்ட சைக் கிள் ''ஏன் சிரிக்கிறீர்?'' என்றது. அதற்கு ஸ்கூட்டர் ''உம்மைப் பார்த்தால் சிரிப்பு வராதா, அண்ணா! உமது வாழ்க்கை ஏன் இப்படி ஆயிற்று? ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கிறீர். என்னைப் பாரும், என் அழகைப் பாரும். வீட்டுக்காரர் என்னில் தானே பய ணம் செய்கிறார். உம்மைத் தொடுவதே இல்லை. நான் காணாத காட்சிகளே இல்லை என்று கூறி நகைத்தது.

இதனைக் கேட்ட சைக்கிளுக்குத் துயரம் தாங்கமுடியவில்லை. தன்னுள் அழுதது. தனது எசமான் இளமைக்காலத்தில் தன்னை வைத் திருந்த நிலையை எண்ணியது. எனக்கும் காலம் வருந்தானே என்று மனத்தைத் தேற் றிக் கொண்டு பேசாது இருந்தது. சில மாதங் கள் கழிந்தன. பெற்றோல் விலை அதிகரித்த துடன் தட்டுப்பாடும் வந்தது.

காந்தனின் அப்பா சைக்கிளில் கந்தோ ருக்கும் ஏனைய இடங்களுக்கும் போய் வந் தார். ஸ்கூட்டர் புழுதி படிந்தபடி நின்றது. அதனைப் பார்த்த சைக்கிள் ஒரு முறை செரு மிவிட்டுச் சிரித்தது. சிரிப்புச் சத்தம் கேட் டதும் ஸ்கூட்டர் நிமிர்ந்து பார்த்தது. ''ஏன் அண்ணா சிரிக்கிறீர்கள்''? என்றது. அதற்குச் சைக்கிள்

''தம்பி, நீர் ஏன் இப்போது மூலையில் நிற்கிறீர்? யானைக்கும் ஒருகாலம் பூனைக்கும் ஒருகாலம் எல்லாம் காலத்தின் கோலம்! உம்மை இயக்கும் பெற்றோலின் விலையேற் றமும் தட்டுப்பாடும் இப்படி ஆக்கிவிட்டது. இதனால் பழையபடி என்னில் பயணம் செய் யத் தொடங்கியுள்ளார், என் எசமானர். எனக்கு எண்ணெயோ, தண்ணீரோ தேவையில்லை. காற்று இருந்தாலே போதும். நான் ஏழை செல்வன் எல்லோருக்கும் தோழன்'' என்றது. இதனைக் கேட்ட ஸ்கூட் டர் நாணத்துடன் தலை கவிழ்ந்தது. துக்கம் தாங்க முடியாது மனத்துக்குள் அழுதது.

ப. சிவாஜினி
ஆண்டு 7 B

# கோமா என்னும் கொடிய நோய்

போராட்டம், கதவடைப்பு, வேலை நிறுத்தம் என்பதெல்லாம் ஒரு நிருவாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் வழிமுறைகள். இவை வெளியில் மட்டும் நடப்பதில்லை, நம் உடலிலும் சில உறுப்புக்கள் சில காரணங்களால் வேலை நிறுத்தம் செய்து உடலின் இயக்கத்தையே செயற்படாமல் செய்து விடுகின்றன. இதனால் திடீரென்று ஒரு மனிதனுக்குக் கவலைக்கிடமான நிலைமைஏற்படுகின்றது. இதைக் கோமா என்று சொல்கின்றார்கள்.

"கோமா" என்றால் மயக்கம் என்று பொருள். இந்த மயக்கம் சாதாரண மனிதனுக்கு உண்டாகும் மயக்கம் அல்ல. கொடிய மயக்கம். படுத்த படுக்கையிலே மனிதனைக் கிடத்திச் சில வாரங்கள், சில வருடங்கள் கூட நினைவு திரும்பாத நிலையை உண்டாக்கும். இதனால் கோமா என்றால் பலர் பயப்படும் நிலை ஏற்படுகிறது.

மூளையில் உள்ள நினைவு மண்டலத்தைச் சில காலம் வரை செயற்படாமல் இந்தக் கோமா நிறுத்தி மனிதனின் மருத்துவ அறிவிற்கும் அப்பாற்பட்ட செயல்களைப் புரிகிறது.

கோமா நிலை ஏற்படும்போது உடலில் ஓர் அதிசயமும் நடக்கிறது. நோயாளியின் இருதயமும் மற்ற உறுப்புக்களும் வேலை செய்யும். ஆனால் மூளையில் உள்ள நினைவு மண்டலம் மட்டும் வேலை செய்வதில்லை. மூளையின் ஒரு பகுதி செயற்படாமல் தடுக்கின்றது. பின்பு மூளையின் மற்றப் பகுதிகளுக்கும் பரவுகின்றது. கடைசியில் சிலருக்கு நினைவு திரும்பாமலே செய்து விடவும் கூடியது கோமா.

ஏதாவது ஒரு விபத்தில் மூளை தாக்கப்பட்டால்சம்பந்தப்பட்டவருக்குக் கோமா வரலாம். இரத்த அழுத்தம் அதிகமாகி மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டால் கோமா வரலாம். நீரிழிவு நோயின் உச்ச கட்டத்திலும் கோமா வரலாம். யூரியா என்ற நச்சுப் பொருள் அதிகமானால் கோமா வரலாம்.

மயக்க நிலை ஏற்பட்டதும் வைத்தியர் முதலில் பிராணவாயுவைச் செலுத்துகிறார். இருதயம் வேலைசெய்கின்றதா என்று கவனிக்கிறார். மூளைக்குச் செல்லும் சுருங்கிய நரம்புகளை விரிவடையச் செய்ய மருந்தை நரம்பு வழியாகச் செலுத்துகிறார். இப்போது மருத்துவ வசதிகள் இருப்பதனால் இரத்தக் குழாய்களைச் சரிசெய்து கோமாவைக் குணப்படுத்தி விடமுடியும். இரத்த அழுத்தம், இருதய நோய், நீரிழிவு நோயாளிகள் வந்தபின் காப்பதைவிட வருமுன் கவனம் செலுத்தினால் கோமா என்னும் நாடகத்திற்கு மங்களம் பாடி மூடுவிழா நடத்தி விடலாம்.

T. கனிமொழி
ஆண்டு 7B

*

# மகாவலி கங்கையின் மாண்பு

இலங்கை வளநாட்டின் எழில்மிகு வனப்பிற்கு உயிரூட்டும் வற்றாத நதியாக மகாவலி கங்கை விளங்குகின்றது. மலைநாட்டிலிருந்து ஊற்றெடுத்து வரும் பல்வேறு கிளை நதிகளைப் பெற்றுப் பாயுமிடமெல்லாம் வளத்தைக் கொடுப்பது மகாவலி கங்கை ஆகும். கண்டி மாநகரின் இயற்கை வனப்புக்கும் மலைச் சாரல்களில் காணப்படும் பச்சைப் பசேலென்ற பசுமையான காட்சிக்கும் அமுதமெனும் அருவி நீர் கொண்டு அழகூட்டும் அன்னையாக, வளநதியாக, ஜீவ நதியாக மகாவலிகங்கை விளங்குகின்றது.

கண்டி நகரின் அழகிற்கு மேன்மேலும் அழகு ஊட்டுவதாக அமைவது. பேராதனைப் பூந்தோட்டத்தில் வளரும் மரங்களுக்கு உயிரூட்டும் தாயாக மகாவலிகங்கை திகழ்கின்றது. பேராதனைப் பூங்காவில் பல்வேறு வகைப்பட்ட மரங்கள் வானளாவி நிற்கின்றன. கண்களுக்கு நல்விருந்தாகும் நன் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. உல

கத்திலேயே காணமுடியாத நறுங்கனி தரும் மரங்களும், நற்பசும் புற்றரைகளும் பூந் தோட்டத்தின் அழகிற்கு மேலும் மெரு கூட்டுவதாக அமைகின்றன. இம் மெருகுக்கு மூலகாரணமாக விளங்குவது மகாவலிகங் கையின் செழுமையான நீரேயாகும்.

மலைகளிலிருந்து மகாவலிகங்கையின் அரு விகள் ஊற்றெடுத்து வெள்ளிக்கம்பிகள்போல் பாய்கின்றன. அதன் பேரிரைச்சலும் பனி படர்ந்த குளிர்ச்சியும் அங்கு நீராடவருகின்ற வரன்களுக்கும், வனிதயர்களுக்கும் புத் துணர்ச்சியையும் புதுப் பொலிவையும் கொடுத்து இன்பமூட்டுகின்றன. வெளிநாட் டிலிருந்து வருகின்ற உல்லாசப் பயணிகள், மகாவலி கங்கை அருவியில் நீராடிப் பேரா தனைப் பூங்காவின் பேரெழிலைக் கண்டு களிக் கின்றனர்.

இலங்கையின் வரண்ட பிரதேசங்க ளுக்கு உயிரூட்டும் ஜீவநதியாக மகாவலிகங் கைக் கிளை ஆறு வடக்கே திருப்பப்பட்டுள் ளது. வனந்தரமாகக் காட்சியளித்த நிலங் கள் எல்லாம் இப்பொழுது வளம் கொழிக் கும் நிலங்களாக மாறியுள்ளன. வடமத்திய மகாணமும், வடமாகாணமும் வளமுள்ள பிரதேசங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்விடங்களில் நெற்பயிர்கள் பயிரிடப்படு கின்றன. உபதானியங்கள் பயிரிடப்படுகின் றன. இதனுல் மக்களின் உணவுப் பற்றுக் குறை நீங்கி உணவில் தன்னிறைவு பெற்று வாழ்வதற்கு மகாவலிகங்கை வழிவகுக்கின் றது. இலங்கையின் உயிரோட்டத்துக்கும் எழில்மிகு வனப்புக்கும் வெளிநாட்டவர்களு டைய கண்களின் நல்விருந்துக்கும் அழகூட் டும், அமுதூட்டும் அன்னையாக மகாவலி கங்கை மிளிர்கின்றது.

பா. ரகுநாதன்
ஆண்டு 9 A

★

## பார்புகழும் பெரியோரின் பள்ளி வாழ்க்கை — 4.

அவர் மாணவராய் இருந்தகாலத்திலேயே ஏனைய மாணவரிலிருந்தும் வேறுபட்டவரா கவே விளங்கினுர். வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது கண்களை மூடிக்கொள்வது அவ ரின் வழக்கம், ஆசிரியர் ஒருநாள் அவர் இருந்த நிலையைக் கண்டு, நித்திரை கொள்கிருர் என்று நினைத்து. அவரருகில் சென்று, தோளில் தட்டினுர் உடனே அவர் திடுக்குற்று விழித் துக் கொண்டதைக் கண்டு ஆசிரியர் ''வகுப்பிலே நித்திரை கொள்கிருயா?'' என்று கோபத் துடன் அதட்டினுர். ''இல்லையே! தாங்கள் சொல்வதைக் கண்களை மூடி மனத்தில் வாங்கிக் கொள்கிறேன்'' என்ருர் அவர். ஆசிரியருக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. அவரைச் சோதிக்க நினைத்துத் தாம் கற்பித்தவற்றில் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவர் சரியான விடைகள் கூறியதைக் கண்ட ஆசிரியருக்கு வியப்பு உண்டாயிற்று.

இம் மாணவர் 'மற்றிக்குலேஷன்' பரீட்சைக்குத் தோற்றியபொழுது வினுத்தாளில் பதின்மூன்று வினுக்கள் அளிக்கப்பட்டு எவையேனும் பத்து வினுக்களுக்கு விடைதருமாறு கேட்கப்பட்டிருந்தது. அவரோ பதின்மூன்று வினுக்களுக்கும் விடை எழுதி, எவையேனும் பத்து விடைகளுக்குப் புள்ளி வழங்குமாறு குறிப்பிட்டார்!

இந்த வினேதமான மாணவர் யார்?

நரேந்திரர் என்ற பிள்ளைத் திருநாமம் உடைய இவர்தாம் வேதாந்த கேசரி

**விவேகானந்த சுவாமிகள்.**

# கல்விப் பொருட் கண்காட்சி

அறிவியற்றுறையில் முன்னேற்றம் கண்ட இந்நூற்றுண்டுக் கல்வியின் நோக்கம் மாணவர்களை மையமாக வைத்து சிந்தனை, செயல் ஆகியவற்றின் மூலம் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதேயாகும். வளர்ச்சியடைந்த நாடுகள் மாணவர்களின் திறனை வெளிப்படுத்தப் பல்வேறு வழிகளைக் கையாண்டு வருகின்றனர். இந்நிலையில் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதே கல்வியின் முழுநோக்கமாகும்.

பொருட்காட்சிகள் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்படும்பொழுதிலும் பாடசாலைகளில் அவை மாணவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கும் அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை அளித்து அவர்கள் விரும்பிய துறைகளை வளர்ப்பதற்கும் கல்விப்பொருட் கண்காட்சி ஓர் ஊன்றுகோலாக அமைகின்றது.

மாணவர்கள் புத்தகப்படிப்புடன் நின்றுவிட்டால் மாத்திரம் போதாது. அவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தச் செயல் மூலமான படைப்புக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. இந்த வகையில் கல்விப் பொருட்காட்சி என்பது பொருள் திரட்டல், பொழுதுபோக்கு போன்ற நோக்கங்களாகக் கொள்ளாது கற்பிக்கப்படும் பாடங்களின் மூலம் பூரணமான அறிவு, ஆற்றல் பெற வைப்பதாகும்.

இக்கல்விப் பொருட் கண்காட்சி எல்லாத்துறைகளையும் உள்ளடக்கியதாக அமையுமிடத்து, அது பூரணத்துவம் பெற்ற தொன்றுக அமைந்து விடுகின்றது. ஆரம்பக் கல்வி பயிலும் பாலர் தொடங்கி உயர்கல்வியைப் பெறும் வயதுவந்த மாணவர்கள் வரை, ஏன் தொழில் நிறுவனங்கள் கூட ஆக்கிப் படைக்கும் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதன் மூலம் ஒவ்வொருவரதும் தனித்துவம் வெளிப்பட்டு நிற்கும்.

இன்றைய கல்வி உலகில் வகுப்பறையில் கட்புல, செவிப்புலச் சாதனங்கள் இல்லாமல் ஆசிரியரால் கற்பிக்க முடியாது. ஆசிரியருந் தாம் கற்பித்த பாடங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த வகுப்பறையில் பிரயோகிக்கும் சாதனங்களின் துணையோடு மாணவர்கள் ஆக்கம் நின்று விடுவதில்லை. மேலும் தமது திறமைக்கேற்பப் பல்வேறு உற்பத்திகளைக் கையாண்டு ஆக்கிப் படைத்தவைகளே கண்காட்சியாக மிளிர்கின்றன.

வகுப்பறையில் பின்தங்கிய மாணவன் காட்சிக்கு வைக்கும் காட்சிப் பொருட்கள் மூலம் அவனது உள்ளார்ந்த நோக்கம் புலப்பட்டு நிற்கின்றது. எனவே இன்றைய கல்வி உலகில் பின்தங்கி இருக்கும் மாணவர்க்கும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக இக் கண்காட்சி அமைகின்றது.

இன்று நாம் யாவரும் விரும்பி நிற்பது மாற்றம் பெற்று வரும் அறிவியல் சார்ந்த சமூகம் ஆகும். இந்த வகையில் கல்விக் கண்காட்சி அறிவியலும், தொழிலியலும் இணைந்து செயற்படுமிடத்து ஆளுமை வெளிப்படுத்தப்படுகின்றது. ஆளுமை பெறுபவன் தன்னையும் சமூகத்தையும் நாட்டையும் வழிநடத்த ஆயத்தம் பெறுகின்றுன் என்று கூறின் மிகையாகாது.

து. ரவிகரன்
ஆண்டு 10 A

# வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனுக்குகின்றது

"அரிது அரிது மானிடராதல் அரிது" எனும் கூற்றின்படி பெறற்கரிய மானிடப் பிறவியை எடுத்த ஒவ்வொரு வரும் உயர்வுடன் சிறந்த மனிதனுக முற்படவேண்டும்.

அறிவால் உயர்ந்தவர்கள் பணத்தால் உயர்ந்தவர்களை விட மதிப்புக்குரியவர்களாக விளங்குவது கண்கூடு. இளம் பராயத்திலிருந்து கல்வி அறிவைப் பெறுவதற்குப் பல இடங்களை நாடிச் செல்கின்றனர். பலர் பல துறைகளிலும் திறமைபெற்று நிபுணத்துவம் அடைகின்றனர்.

யார் எப்படி உயர் பதவியை வகித்தாலும் அவர்கள் எந்தநேரமும் கற்றுக்கொண்டு ஏதோ ஒன்றை வாசித்துக்கொண்டே இருக்கின்றனர். இருக்க வேண்டும். நாம் 'கற்றது கைமண் அளவு' கல்லாதது உலகளவு என்பது ஆன்ருேர் வாக்கு.

'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்னும் முதுமொழிக்கிணங்க எவற்றையும் வாசிக்கும் பழக்கத்தைச் சிறுவயதில் இருந்தே பழகிக்கொள்ள வேண்டும். மாணவர்கள் சிறுகதைகளை வாசித்தறிவதில் ஆர்வம் உள்ளவர்கள். அப்பழக்கம் வயது கூடக் கூட வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்து விடும்.

உத்தியோகத்தர்கள் தத்தம் துறைகள் மேம்படத் தம் தொழில்களைத் திறம்படச் செய்ய எந்நேரமும் வாசித்துக் கொண்டே இருக்க வேண்டும். எவற்றை வாசிப்பது? மாணவர் தம் பரீட்சையில் திறம்படச் சித்தி அடைவதற்கு வேண்டிய இலக்கிய, விஞ்ஞான நூல்களையும் கதை, கட்டுரைகளையும் வாசிக்க வேண்டும். இதனுல் ஆழ்ந்த அறிவும் சிந்தனை சக்தியும் நல்ல வசன நடைத் திறனும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர் தம் மாணவர்களுக்கு ஐயம் திரிபு நீக்கிக் கற்பிப்பதற்குப் பல நூல்களையும் வாசித்துப் பரந்த அறிவையும் அநுபவத்தையும் பெறல்வேண்டும். இதனுல் எந்த நேரமும் வாசிக்க வேண்டும்.

விஞ்ஞானிகள் பெரிய பெரிய ஆராய்ச்சிகளைச் செய்து பல புதிய கண்டுபிடிப்புக்களை எல்லாம் உலகிற்கு அளிக்கின்றனர். இதனுல் அவர்களும் விஞ்ஞான ஆராய்ச்சி நூல்களை வாசித்துக்கொண்டே இருக்கின்றனர். ஏன் விவசாயிகள் தொழிலில் கூடிய பயனை, இலாபத்தைப் பெறுவதற்கு விவசாயம் தொடர்பான நூல்களை வாசிக்கத்தான் செய்கிருர்கள்.

சிறுசிறு தொழிலாளி கூடத் தன் ஓய்வு நேரங்களில் இராமாயணம் பாரதம் முதலிய வற்றை வாசிக்கின்ருன். தினசரிப் பத்திரிகையினைத் தேடி வாசித்து உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள செய்திகளை, புதினங்களை அறிகின்றனர்.

இன்னும் பத்திரிகைகள் வெளிநாட்டுச் சஞ்சிகைகள் என்பவற்றை வாசிக்கவேண்டும். வாசிகசாலைகளில் பலவிதப் பத்திரிகைகளும் இருக்கும். அங்கு சென்ருல் எதையும் வாசிக்க முடியும். பாடசாலைகளில் உள்ள நூல்நிலையங்களிலும் கிராமங்களில் உள்ள நூல்நிலையங்களிலும் ஓய்வுநேரத்திற் சென்று வாசிக்க முடியும். இப்படிக் கடைப்பிடித்து வரும் எந்த ஒரு மனிதனும் பலவகை அறிவும் மொழித்திறனும் சிறந்த வசன நடையும் பெற்று, சிறந்த ஒரு மனிதனுகத் தலைநிமிர்ந்து நிற்க வாசிப்பு ஓர் ஊன்றுகோலாகும்.

ஆ. ரூபவதனி
ஆண்டு 10 A

# சமயக்கல்வி

சமயம் என்பது ஒருவித வாழ்க்கை முறை. அல்லது உணரக்கூடிய அநுபவ மாகும். பரம்பொருளை அடைய மனிதன் கொண்ட மார்க்கந்தான் சமயம். இறைவழி பாடாகவும், சமயநெறியாகவும், அற ஒழுக்க மாகவும் இன்றைய சமுதாயத்தில் சமயம் வளர்ச்சியடைந்துள்ளது.

" கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின்"

என்னும் தெய்வப்புலவரின் திருவாக்கை நோக்குவோமாயின் கற்றதினுல் எய்தும் பயன் இறைவன் திருவடிகளை வணங்குதலே என்ற உண்மை எமக்குப் புலனுகும்.

மனிதன் பெற விரும்பும் அறிவே கல்வி யாகும். "மக்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக் கொணர்ந்து விளக்கம் பெறச் செய்வதே கல்வியாகும்" என்பது காந்தியடிகள் கல்விக் குத் தந்த விளக்கமாகும். இங்கு ஆன்மா வைப்பற்றிய விளக்கம் தருவதே சமயக் கல்வியாகும்.

வாழும் முறைக்கும் ஒழுக்க வாழ்வுக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் கல்வி காரணமாக அமைகிறது. உண்மைப் பொருளான ஆன்மா வின் ஈடேற்றமே கல்வியாகும். கல்விக் கும், சமயத்துக்கும் விளக்கம் கூறிய சுவாமி விவேகானந்தர் 'முன்னரே இருக்கும் அறிவு தெய்விக விளக்கம் பெறுவதே சமயம்' என்று இலக்கணம் வகுத்துக் கூறுகிறுர்.

உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள கல்வி முறைகளில் சமயக்கல்வியே முக்கிய மானதும் பழமையானதுமாகும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருக்கவேண்டிய ஆன்மிக இயற்கை விதிகள் பற்றிக் கூறுவதே சமயக்கல்வியாகும். சமயம் மக்களின் வாழ்க்கை இலட்சியத்தை அறிவு றுத்தலுடன் அன்பு, தியாகம், பண்பு, பணிவு, அடக்கம், மனிதத்தன்மை, தயை, தாட்சண்யம் ஆகியவற்றேடு கலை, கலாச் சாரம், அறிவியல், சுகாதாரம், இலக்கியம், ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

இச்சமயக் கல்வியானது சிந்தனைகளையும் போதனைகளையும், எண்ணங்களையும், வியா பித்து மனித நடத்தைகளை வழிப்படுத்தி நிற்கின்றது.

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்னும் குறட் பாவிற்கு ஏற்ப ஒழுக்கமே வாழ்வின் குன்றுத விளக்கு. மனித வாழ் வுக்கு இன்றியமையாததாகிய நல்லொழுக் கத்தையும் சமயக்கல்வி வற்புறுத்துகிறது.

" குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு."

என்று நாலடியார் கூறும் கல்வியின் குறிக் கோள் ஒழுக்க வாழ்வில் ஏற்படும் அறஉணர் வேயாகும்.

சமூக விழுமியங்களுக்கேற்ப மனிதன் தன்னைக் கட்டுப்படுத்தி, தனது ஆளுமையை விருத்தியாக்க உதவி செய்வது சமயக்கல்வி. ஒருவன் குற்றம் செய்தலில் இருந்து தடுத்து நிறுத்திவிடுவது சமயக்கல்வியே யாகும். சமயக்கல்வியினுல் ஒருவன் தனக் கும் பிறருக்கும் தீமைபயப்பதினின்றும் தவிர்த்துக் கொள்ளலாம். தன்னலத்தை விடப் பிறர் நலனை விரும்பி நிற்கும் நிலையை அளிப்பதும் சமயக்கல்வியே.

இன்று நாம் போற்றுகின்ற பெரியோர் களான காந்தியடிகள், சுவாமி விவேகானந் தர் போன்றேர் தம் இளமைக்காலத்தில் கைக்கொண்ட சமய ஒழுக்கங்களே இன்று அவர்களை நாம் போற்ற வைத்துள்ளன. சமயக்கல்வியை நாம் இளமைக்காலத்தில், பாடசாலை வாழ்க்கையில் பெற்று வந்தால் வாழ்வு சிறக்க முடியும். அன்பும் அறனும் கொண்டு பண்பும், பயனும் அடைய வழி காட்டுவது சமயக்கல்வி என்றுல் அது மிகை யாகாது.

ப. லோகிதரன்
ஆண்டு 11 B

# இலக்கியத்தின் பயன்கள்

மொழியினைக் கருவியாகக் கொண்டு பிறப்பது இலக்கியம். அது காலத்தால் அழியாது நிலைப்பதனையே அளவு கருவியாகக் கொண்டுவாழ்வது. உணர்ச்சியும் கற்பனையுங் கூடிய அநுபவவெளிப்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது. இக்காரணங்களால் அது ஏனைய கவின்கலைகளினுஞ் சிறப்புடையதாகிறது.

இத்தகைய இலக்கியத்தின் பயன்கள் மிகப்பல. அவற்றில் பிரதானமானது உலக வரலாற்றையே மாற்றியமைக்கும் தன்மை. அறிவியல் வளர்ச்சியினுல் ஏற்படும் மாற்றங்களிலும் பார்க்க, மனவளர்ச்சியினுல் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையன. கொடுமையும், வற்புறுத்தலுங்கொண்ட அரசியலமைப்பினுலுஞ் சட்டதிட்டங்களினுலும், நிலையான சீர்திருத்தம் உண்டாகாது. உள்ளத்தின் ஆழத்திலே முளைவிட்டு வளர்ந்து செழிக்கும் இயற்கைச் சீர்திருத்தமே நிலையானதும் பயனுள்ளதுமாகும். எனவே உயரிய சமுதாய மலர்ச்சியை உண்டாக்க வல்லது இலக்கியம்.

